# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 மாசி 29 புதன்கிழமை (12.03.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 107


# இலங்கைப் படைகளின் தமிழின அழிப்புக்கு இந்திய அரசே பொறுப்பேற்க வேண்டும்!

## விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி,மார்ச்12

**சிங்களத்தின் போர் இயந்திரத்திற்கு முண்டு கொடுப்பதற்கு இந்தியா முயல்கின்றது எனக் குற்றம் சுமத்தியுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், இந்திய அரசின் இத்தகைய செயற்பாடுகளினால் புத்தாக்கம் பெற்றுள்ள சிங்களப் படைகள் மேற்கொள்ளப்போகும் தமிழின அழிப்புக்கும் இந்திய அரசே இனிப் பொறுப்பேற்கவேண்டும் என்றும் தெரிவித்திருக்கின்றது.**

விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் நேற்றுமுன்தினம் விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

'மீண்டும் ஒரு வரலாற்றுத் தவறை இழைக்க இந்திய அரசு முற்படுகின்றதா?' - என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

ஈழத் தமிழர்கள் மீதான சிங்கள அரசின் இன அழிப்பு செயலுக்குத் தலைமையேற்று நிற்கும் இலங்கையின் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகாவை வரவேற்று உயர் அரச கௌரவத்தை வழங்கிய இந்திய அரசின் செயல் ஈழத் தமிழர்களை வேதனைக்குள்ளாக்கியுள்ளது.

போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை வன்முறைகள் குறித்து போவர் கவலை

ஒஸ்லோ,மார்ச 12

இலங்கையில் அதிகரித்து வரும் மனித உரிமை மீறல்களும் வன்முறைகளும் கவலையளிக்கின்றன என்று நோர்வேயின் விசேட தூதர் ஹன்சன் போவர் கூறியுள்ளனார்.

தமிழ்தேசியக் கூட்டமைப்பு எம்.பி யான கி.சிவநேசனின் படுகொலையைக் கண்டித்து நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் வெளியுறவு அமைச்சுக்கு முன்பாக நேற்றுமுன்தினம் கண்டனக் கூட்டம் இடம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஊடக அடக்குமுறைக்கு எதிராக ரூபவாஹினி முன் ஆர்ப்பாட்டம்

### பல நூற்றுக்கணக்கில் ஊடகவியலாளர்கள் திரண்டனர்

கொழும்பு,மார்ச்12

ஊடக அடக்குமுறையைக் கண்டித்து ஊடக அடக்குமுறைக்கு எதிரான இயக்கம் நேற்று நண்பகல் கொழும்பு 'ரூபவாஹினி' கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக நடத்திய பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஊடகவியலாளர்களுடன், கலைஞர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என பல நூற்றுக் கணக்கானோர் திரண்டு பங்குபற்றினர். இதனால் அப்பகுதியில் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், சுதந்திர ஊடக இயக்கம், முஸ்லிம் மீடியா போரம், இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், ஊடக ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம் ஆகிய ஐந்து ஊடக அமைப்புகள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

அண்மைக் காலத்தில் அமைச்சர் மேர்வின் சில்வா குண்டர் குழுவுடன் ரூபவாஹினிக்குள் புகுந்து அட்டகாசம் புரிந்த சம்பவத்தை அடுத்து இதுவரை ரூபவாஹினியின் நான்கு ஊழியர்கள் அச்சுறுத்தப்பட்டு அல்லது தாக்கப்பட்டுள்ள பின்னணியிலேயே நேற்றைய ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. (12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அதிகாரிகள் அறுவரை இந்திய அரசு அழைத்தமைக்கு எதிர்ப்பு

### தமிழகம் கோவையில் ஆர்ப்பாட்டம்

சென்னை,மார்ச் 12

தமிழ்நாட்டின் குன்னூர் அருகே உள்ள வெலிங்டன் இராணுவப் பயிற்சி மையத்திற்கு இலங்கையின் முப்படைகளைச் சேர்ந்த 6 உயர் அதிகாரிகளை இந்திய அரசு அழைத்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கோவையில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டிருக்கிறது.

இலங்கை இராணுவத்தின் இணைத் தளபதி ரத்நாயக்க, மேஜர் ஜெனரல் டபிள்யூ. பி.எல். பெர்ணாண்டோ, கடற்படையைச் சேர்ந்த ரியல் அட்மிரல் தெனோனி, விமானப்படையைச் சேர்ந்த பி.பி. பிரேமச்சந்திர உட்பட ஆறுபேர் வெலிங்டன் பயிற்சி மையத்திற்கு இந்திய அரசால் அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்திய அரசின் இந்தச் செயலைக் கண்டித்து கோவை லயன்ஸ் கிளப் அருகில் நேற்று மாலை 5 மணிக்கு நூற்றுக்கு மேற்பட்ட தமிழினப்பற்றாளர்கள் ஒன்றுதிரண்டு இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தையில் தேடுதல் சந்தேகத்தில் 13 தமிழர் கைது

கொழும்பு,மார்ச் 12

வெள்ளவத்தையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்து வெள்ளவத்தையில் பல பகுதிகளில் படையினரும், பொலிஸாரும் இணைந்து நேற்றுமுன்தினம் முதல் நேற்று அதிகாலை வரை நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது 13 தமிழர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பொலிஸாரும், படையினரும் வீடு வீடாகவும் வீதிகளிலும் தேடுதலில் ஈடுபட்டனர். இந்தத் தேடுதல் மற்றும் சோதனை நடவடிக்கையின்போது 50இற்கும் அதிகமான சந்தேக நபர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். 13 பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று வெள்ளவத்தை குற்றத்தடுப்புப் பிரிவின் இன்ஸ்பெக்டர் அமரசேகர தெரிவித்துள்ளார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் பலர் வடக்கு, கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். தற்காலிகமாகக் குடியிருந்த இவர்கள் விசாரணைகளின் பின் விடுவிக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (சி)

## கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளை ஆட்சேபித்து ஐ.தே.க. இன்று ஆர்ப்பாட்டம்

### ராஜகிரியவில் உள்ள தேர்தல் செயலகம் முன்பாக

கொழும்பு,மார்ச் 12

நேற்றுமுன்தினம் நடந்து முடிந்த கிழக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளை ஏற்கமுடியாது எனத் தெரிவித்து அதற்கான எதிர்ப்பை வெளிப்படுத்தும் விதத்தில் ஐக்கிய தேசியக் கட்சி இன்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துகின்றது.

ராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல் செயலகம் முன்பாக இன்று காலை 10.30 மணிக்கு இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று ஐ.தே.கட்சி நேற்று அறிவித்தது.

ஐ.தே.கட்சியின் எம்.பிக்கள், கட்சியின் முக்கிய பிரமுகர்கள் ஆகியோரும் பெரும் திரளான கட்சி ஆதரவாளர்களும் இதில் கலந்துகொள்வர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊழல், மோசடிகள் நிறைந்த இந்தத் தேர்தல் முடிவுகளுக்கு எதிராகத் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் அனைவரையும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வருமாறு அக்கட்சி, மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது. (சி)

## மட்டு.மாநகரசபையின் மேயராக பத்மினி?

மட்டக்களப்பு,மார்ச்12

மட்டக்களப்பு மாநகரசபையின் மேயராக பெண் ஒருவர் பதவி ஏற்கலாம் என நம்பப்படுகிறது

மட்டக்களப்பு மாநகர சபைக்கு இடம்பெற்ற தேர்தலில் வெற்றிபெற்ற எஸ்.பத்மினி என்ற பெண் வேட்பாளர் ஆகக் கூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார். அவர் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் சார்பில் போட்டியிட்டிருந்தார்.

மட்டக்களப்பு மாநகரசபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பட்டியலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் வேட்பாளர்களும் போட்டியிட்டிருந்தனர். முன்னணி 11 ஆசனங்களை கைப்பற்றியிருந்தது.

தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் வேட்பாளரான பத்மினி 4,722 விருப்பு வாக்குகளை பெற்று முதலாம் இடத்தில் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## மோசடித் தேர்தல் என விமர்சித்து முடிவுகளை நிராகரிக்கிறது ஐ.தே.க.!

கொழும்பு, மார்ச் 12

கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அம்முடிவுகளைத் தான் முற்றாக நிராகரிப்பதாகவும் ஐ.தே.கட்சி தெரிவித்துள்ளது.

வாக்குப் பெட்டிகள் அரசுடன் சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுக்களால் வன்முறைகள், ஊழல், மோசடிகள் மூலம் நிரப்பப்பட்டுள்ளன என்றும், இத்தேர்தல் ஜனநாயக விரோதமானது என்றும் அக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் சிரேஷ்ட எம்.பியான லக்ஷ்மன் கிரியெல்லவே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

நடந்து முடிந்திருக்கும் கிழக்கு உள்ளூராட்சிசபைத் தேர்தல் முடிவுகளை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. இது வன்முறைகள் நிறைந்த தேர்தல்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாண சபைத் தேர்தல் அறிவிப்பு நாளை மறுதினம்

கொழும்பு,மார்ச் 12

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பான அறிவித்தல் ஒன்றை நாளைமறுதினம் 14ஆம் திகதி தேர்தல் ஆணையாளர் வெளியிடுவார் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்த தகவலை நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்த்தன வெளியிட்டார்.

மேற்படி தேர்தலுக்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த 7ஆம் திகதி தேர்தல் ஆணையாளருக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலை எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் நடத்தி முடிக்க நடவடிக்கை எடுக்குமாறும் தேர்தல் ஆணையாளரை ஜனாதிபதி பணித்துள்ளார் என்று ஒரு தகவல் தெரிவித்தது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டி வேம்படியில்

வடக்கு மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் யாழ்.மாவட்டத்துக்குரிய போட்டிகள் எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

விவாதம், தமிழறிவு வினாவிடை ஆகிய போட்டிகள் தவிர்ந்த ஏனைய போட்டிகள் இரு தினங்களும் இடம்பெறும்.

போட்டி நிகழ்ச்சி நிரல்கள் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என போட்டி ஏற்பாட்டாளரான தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.ராஜேந்திரன் தெரிவித்தார்.

மாகாண மட்ட எழுத்தாக்கப் போட்டிகள் ஏற்கனவே நடைபெற்று முடிந்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (1)


## வாழ்த்தி வரவேற்கின்றோம்

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளராக 10.03.2008 இல் கடமையேற்ற

**திருமதி அ.வேதநாயகம்**

அவர்களைக் கல்விப் பணியாற்றப் பெருமகிழ்வுடன் வரவேற்கின்றோம்.



**கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலகமும் அதிபர்களும்.** (71963)



## யா/புனித றோக்ஸ் றோ.க. வித்தியாலயம் இல்ல மெய்வன்மைப் போட்டி - 2008

இடம் :- சென்.றோக்ஸ் விளையாட்டுக் கழக மைதானம்
காலம் :- 15.03.2008 சனிக்கிழமை பி.ப. 1.30 மணி

தலைவர் : திரு.தி.சத்தியபாலன் (அதிபர்)

பிரதம விருந்தினர்:
திருமதி அ.வேதநாயகம்
(கல்விப் பணிப்பாளர்,யாழ். கல்வி வலயம்)

சிறப்பு விருந்தினர்கள் : திரு. பூ.குகதாசன்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆரம்பக் கல்வி, யாழ்.வலயம்)

பரிசில் வழங்குபவர்: திருமதி செ.ஜினா குகதாசல்
(ஆசிரியர், ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்)

அருட்பணி கை.பி.கனிசியஸ்ராஜ்
(உதவிப் பங்குத் தந்தை, மரியன்னை பேராலயம்)

கௌரவ விருந்தினர்: திரு. ரீ.எம்.வசந்தநாயகம்
(மாவட்ட இணைப்பாளர், World Vision)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(71959) பாடசாலைச் சமூகம்.



## ஓராண்டு நினைவலைகள்

மலர்வு 29 . 04 . 1932

உதிர்வு 21 . 02 . 2007



**அமரர் சண்முகம் குலசிங்கம்**

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், வனபரிபாலனம்)

திதி: 12.03.2008

ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அவை அனைத்தும் உங்கள்
அன்புக்கு ஈடாகுமா!
அகிலத்தை விட்டு அகன்று சென்றாலும்
அழியாது உம் நினைவு எமைவிட்டு!

அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

வரியப்புலம்,
மல்லாகம். (71887) **குடும்பத்தினர்.**



# COMPUTER EXPRESS
## INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

#15, Sirambiyadi Lane, Jaffna *Branch* : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 021 222 8250 , 0777 222422

**மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2008** 80% Off

அனைவருக்கும் புலமைப்பரிசில்

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science 4 Months ~~10,750~~ 2,150 | Honours Diploma in Computer Science 5 Months ~~13,000~~ 2,600 | Diploma in Web page Designing 4 Months ~~10,750~~ 2,150 |
| Diploma in Graphic Desining 4 Months ~~10,750~~ 2,150 | Diploma in Desktop Publishing 4 Months ~~10,000~~ 2,000 | Diploma in Hardware Engineering 3 Months ~~10,000~~ 2,000 |
| Diploma in Auto CAD 3 Months ~~10,000~~ 2,000 | Diploma in Microsoft Office 3 Months 1,500 | Accounting Package 3 Months ~~10,750~~ 2,150 |

**50% Off ADVANCE COURSES**

| | | |
|---|---|---|
| Diploma in Multimedia | ~~5500~~ | 2750 |
| Diploma in Video Editing | ~~6500~~ | 3250 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்பட்ட அனுமதியுண்டு.

வகுப்புக்கள் ஆரம்பம் :
Batch I : 14/03/2008 2PM
Batch II : 15/03/2008 2PM
Batch III : 16/03/2008
Batch IV : 19/03/2008



## வீடு விற்பனைக்கு

நவீன வசதிகள் கொண்ட அழகிய வீடு 3 1/2 பரப்புடன் தொலைபேசி வசதியுடனும் விற்பனைக்கு உண்டு.

*சிறிராஜ், திருஞானசம்பந்தர் வீதி, சங்கரத்தை, வட்டுக்கோட்டை*


## மீசாலை மேற்கில் பேக்கரி தொழிலாளி நேற்று சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்,மார்ச்.12

மீசாலை மேற்கில் பேக்கரி தொழிலாளியான குடும்பஸ்தர் நேற்று காலை 6.20 மணிக்கு அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த இரத்தினம் விநாயகேஸ்வரன் (வயது 34) என்பவரே மரணமானவராவார்.

ஆலயப் பூசைக்காகபொருள்கள்கொடுத்து விட்டு வீடு திரும்புகையில் அங்கு காத்திருந்தவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டு தப்பியோடி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. (1-207-78)

## இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்12

மாகண மட்ட கணனி மென்பொருள் ஆக்கப்போட்டிகளில் வெற்றி பெற்ற தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கான சான்றிதழ்களும் பணப் பரிசில்களும் வழங்கும் நிகழ்வு இன்று நண்பகல் 12 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும். (1-207)

* * *

வலிதென்மேற்கு,மார்ச்12

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரீகத் துறை நடத்தும் கருத்தரங்குத் தொடரின் முதலாவது கருத்தரங்கு இன்று புதன் கிழமை முற்பகல் பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நாகரீகத்துறை தலைவர் கலாநிதி மா.வேதநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் வாழ்நாள் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் "ஆகமங்களும் இந்துப் பண்பாடும்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (1-135)

* * *

வடமராட்சி, மார்ச்12

வடமராட்சியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளில் பயிலும் தரம் 1 தொடக்கம் 9 வரையிலான மாணவர்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை பாடசாலை உபகரணங்களை இன்று புதன்கிழமை வழங்கவுள்ளது.

15 பாடசாலைகளின் மாணவர்களுக்கு பாடசாலைப் பைகள், கொப்பிகள், கொம்பாஸ் பெட்டி என்பன வழங்கப்படவுள்ளன. (1-236)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்12

சாவகச்சேரி பிரதேச சபையில் நீண்டகாலமாக பணிபுரிந்து ஓய்வு பெற்றும், இடமாற்றம் பெற்றும் சென்ற உத்தியோகத்தர்களின் சேவைநலன் பாராட்டு விழா சாவகச்சேரி பிரதேச சபை ஊழியர் நலன் புரிச் சங்கத்தால் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பிரதேச சபை செயலாளரும் நலன்புரிச் சங்கத் தலைவருமான வே.சிவராஜலிங்கம் தலைமையில் வைபவம் நடைபெறவுள்ளது. (1-231)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்.12

கோண்டாவில் குருதேவர் கந்தையா சுவாமிகளின் 30 ஆவது வருடாந்த குருபூசை இன்று காலை 8 மணி முதல் கோண்டாவில் அற்புதநர்த்தன விநாயகர் ஆலயத்தில் அ.ம ம ந்துள்ள சுவாமிகளின் சமாதியில் நடைபெறும். (1)


## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை பிராந்திய காரியாலயம், யாழ்ப்பாணம்

# கேள்விகோரல்

கேள்வி: (News Print Paper) செய்தித்தாள் அச்சிடும் A4 அளவுடைய வர்ணத்தாளில் (Coloured) 70gஇல் 100,000 பிரதிகள் அச்சிடுதலும் வழங்குதலும்.

கேள்வி இல: O&M/N/MM/RO/2008/01

உலக நீர் தினத்தை முன்னிட்டு யாழ்.பிராந்திய தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை விழிப்புணர்வு நடவடிக்கைக்கான கையேடுகளை அச்சிடுவதற்காகத் தகுதியுடையோரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விகள் மூடப்பட்ட கடித உறையில் இடப்பட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வி கோரல் இலக்கம் குறிப்பிடப்பட்டு 17.03.2008 அன்று முற்பகல் 10 மணிக்கு முன்பு எமது அலுவலகத்திற்கு கிடைக்கக்கூடியதாக நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பவும். கேள்விகள் அன்றைய தினமே பிற்பகல் 2 மணிக்குத் திறக்கப்படும். மேலதிக விவரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும். (021 222 3742)

**தலைவர்,**
*கேள்வி கோரல் சபை, பிராந்திய காரியாலயம்,*
*தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை,*
*கண்டி வீதி, யாழ்ப்பாணம்.*

''நீர் - ஒவ்வொரு துளியும் பெறுமதியானது''

(சி/551802)


# மரண அறிவித்தல்கள்


## திருமதி சிதம்பரநாயகி இரத்தினவடிவேல்



கிழக்குத்தெரு, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிதம்பரநாயகி இரத்தினவடிவேல் நேற்று (11.03.2008) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - அமிர்தவள்ளி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற திருச்சிற்றம்பலம் - அரியநாயகம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினவடிவேலின் அன்பு மனைவியும் திருநந்தேவி (பிரதேச செயலகம், பருத்தித்துறை), அமிர்தராணி (நகரசபை, வல்வெட்டித்துறை) ஆகியோரின் அன்புத் தாயாரும் சோமசேகரம் ஏகாந்தனின் மாமியாரும், மயூரியின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற தையல்நாயகி முருகுப்பிள்ளை, நடராசா சிதம்பரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பா.விமலேஸ்வரராணி (கொழும்பு), காலஞ்சென்ற மு.ஜெயசோதிவேல், திருமதி நிர்மலா சிவானந்தம், மு.சக்திவேல் (கனடா), மு.ஞானவேல் (லண்டன்) ஆகியோரின் சிறிய தாயாரும் ந. சுகந்தினி (கனடா), சி. முகுந்தன் (கனடா) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2008) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு சில்லாலை லேன், வேம்படி, வல்வெட்டித்துறை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊறணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.

சில்லாலை,
வல்வெட்டித்துறை. (71961)



## மருதையனார் பவானந்தன்



அனலைதீவு, இரண்டாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட மருதையனார் பவானந்தன் 08.03.2008 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் பாலரஞ்சனாவின் அன்புக் கணவரும் சரண்யா, மதுஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான மருதையனார் - இலட்சுமிப்பிள்ளையின் அன்பு மகனும் நடராசா - புவனேஸ்வரியின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (13.03.2008) வியாழக்கிழமை ஜேர்மனியில் அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: நடராசா (மாமனார்)

அராலி தெற்கு. (71968)



## இராமலிங்கம் கனகரத்தினம்



திருநெல்வேலி தெற்கு, 17/8, பிள்ளையார் வீதியைச் சேர்ந்த இராமலிங்கம் கனகரத்தினம் 08.03.2008 சனிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சற்குணராசா (லண்டன்) மற்றும் கருணானந்தன், பத்மலோசனி, பத்மலீலா (கனடா), ஸ்ரீரமணானந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சித்திரா (லண்டன்), சாந்தி (கொழும்பு), இரகுநாதன் (கல்வியியற்துறை, யாழ். பல்கலைக்கழகம்), அகிலன் (கனடா), கலாவதி (கனடா) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற இராமலிங்கம் -வள்ளியம்மை ஆகியோரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற கந்தையா - மீனாட்சியின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், சோமசுந்தரம், சண்முகராசா மற்றும் சுப்பிமணியம், மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம், இராசலிங்கம், முத்துலிங்கம் இராசமணி மற்றும் இராசம்மா ஆகியோரின் மைத்துனரும் சுரேஷ்குமார், இந்துஷா, தனுஷா, அபிலாஷா, ஜனகன், உமையவன், பிரசான், பிரவீ ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.03.2008) வியாழக்கிழமை பி.ப 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: க.கருணானந்தன்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பேரழகாலும் மதிநுட்பத்தாலும் மாவீரர்களான மன்னர்கள் பலரை மயக்கி தனக்குக் கீழ்படிய வைத்திருந்தவள் பேரரசி கிளியோபாட்ரா. வரலாறு படிக்கும் மாணவர்கள் கிளியோ பாட்ரா வைப்பற்றி அறிந்திருப்பாகள். ஒருசிறு அறிமுகம் இது.

கிளியோபாட்ரா என்று சொன்னதும், இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு முன்பு வாழ்ந்த உலகப் பேரழகி அவள் என்பது உங்களுக்குச் சட்டென்று நினைவுக்கு வரும்.

பேரழகியாக திகழ்ந்ததோடு மட்டுமன்றி சிறந்த அறிவாற்றல் கொண்டும் விளங்கினாள் இவள். அந்த காலத்திலேயே 9 மொழிகளை பேசினாள். கி.மு. 69 ஆம் ஆண்டு வடக்கு எகிப்தின் கடற்கரையில் அமைந்த அலெக்சாண்டிரியாவில் பிறந்தாள். பின்னாளில் எகிப்திய அரசியானாள். அலெக்சாண்டர் எகிப்தைக் கைப்பற்றியவுடன் தன்னை ஆதி தெய்வமான அம்மனின் மகன் என்று பிரகடனப்படுத்திக் கொண்டார். அதேபோல், கிளியோபாட்ராவும் தன்னை எகிப்தின் ஆதி தெய்வமான ரேயின் மகள் என்ற எண்ணத்தை மக்கள் மனதில் விதைத்தாள். பூர்விக நகரங்களான தீப்ஸ், ஹெர்மன் திஸ் ஆகிய இடங்களில் மிகவும் அதிகாரம் செலுத்தி வந்த புரோகிதர்களின் ஆதரவை தனது மதிநுட்பத்தால் வென்றெடுத்தாள் கிளியோபாட்ரா.



# அழகிற்கும், அறிவிற்கும் பேர்போன பேரரசி கிளியோ பாட்ரா

ஹெர்மன்திஸின் டென்டிரா என்ற இடத்தில் இவள் எழுப்பிய ஆலயத்தில் ஹதர் என்ற தெய்வத்தின் தோற்றத்தில் கிளியோ பாட்ராவின் உருவம் பின்னாளில் நிறுவப்பட்டது.

இதனால், அவளது அரசுக்கு உட்பட்ட பகுதியை சேர்ந்தவர்கள் கிளியோ பாட்ராவை ஒருபேரழகியாக மாத்திரமின்றி, தெய்வத்தின் மகளாகவும் எண்ணி வணங்கினர்.

கிளியோ பாட்ரா ரோமப் பேரரசர் ஜூலியஸ் சீஸருடன் இணைந்தபோது, கி.மு. 46 இல் ரோம் நகருக்கு அருகில் டைபர் நதிக்கரையில் சீஸரின் வசந்த மாளிகையில் வாழ்ந்தாள். அப்போது, அன்பளிப்புகளையும், பட்டங்களையும் ஏராளமாக அள்ளிக்கொடுத்து கிளியோ பாட்ராவை மகிழ வைத்தார் சீஸர்.

அவளது அழகில் மயங்கிக் கிடந்தார். ஒரு கட்டத்தில், இதைவிட இன்னும் ஒருபடி மேலேபோய், ரோமானிய காதல் தெய்வமான வீனஸின் கோவிலில் கிளி யோபாட்ராவின் சிலையை நிறுவினார். (கி.மு. 44ல் இதனால் உள்நாட்டு பிரச்சினை எழுந்து சீஸர் கொல்லப்பட்டார் என்பது வேறு விஷயம்). கி.மு. 43 இல் கிளியோபாட்ரா துருக்கிக்கு பயணமானாள். உல்லாசத் தோணியில் அவள் கடற்கரையை வந்தடைந்து இறங்கினாள்.

தங்க விதானத்தில் சாய்ந்து நிற்கும் ரோமானிய காதல் தெய்வமான வீனஸின் சாயலில் அப்போது கிளியோபாட்ரா இருந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

கி.மு. 40-களில், தான் மிகவும் நேசித்த ரோமானிய வேந்தன் ஆண்டனியுடன் கிளியோபாட்ரா இணைந்து வாழ்ந்தாள். கி.மு.36 இல் அர்மீனியாவை ஆண்டனி கைப்பற்றித் தனது ஆளுகையின் கீழ் கொண்டுவந்தார். இதை வெற்றி விழாகவகக் கொண்டாடினார் ஆண்டனி.

பல நாள்கள் நடந்த இந்த விழாவில் கிளியோபாட்ரா புதிய ஐஸிஸ் என்ற தெய்வமாகவும், ஆண்டனி புதிய டயோனிஸஸ் என்ற தெய்வமாகவும் போற்றப்பட்டனர். கிளியோபாட்ரா ஒரு பேரழகியாக மாத்திரம் அல்லாமல், தெய்வத்துக்கு இணையாக அப்போது போற்றப்பட்டாள் என்பதும் இதன் மூலம் தெரியவருகிறது. யார் அந்தக் கிளியோபாட்ரா?

பழங்காலத்தில் கிளியோபாட்ரா என்ற பெயரில் பல பெண்கள் இருந்துள்ளனர். கி.மு. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்ததாக கருதப்படும் பழமைவாய்ந்த கிரேக்க காவிய படைப்பாளரான ஹோமரின் இலியட் என்ற காவியத்திலேயே கிளியோ பாட்ரா என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. கி.மு.இரண்டாம் நூற்றாண்டு வரை கிளியோபாட்ரா என்ற பெயருடைய பலர், புகழ் பெற்ற மன்னர்கள் பலரது மனைவிகளாகவும், பேரரசை ஆண்ட அரசிகளாகவும் இருந்துள்ளனர். பேரழகி கிளியோபாட்ரா என்று, இன்று உலகம்முழுவதும் போற்றப்படுபவள் ஏழாம் கிளியோபாட்ரா ஆவாள். இவள் தனது 18 ஆவது வயதில், தம்பியான 12 வயதே நிரம்பிய 13 ஆம் டாலமியை திருமணம் செய்துகொண்டு எகிப்தின் அரசியாகப் பதவியேற்றாள்.

22ஆண்டுகள் ஆட்சி செய்தாள். இவளது அழகில் மயங்கிக் கிடந்த மாவீரர்கள் பலர். *

## மறக்க முடியுமா?

ஓர் அழகான இளம் ஆசிரியை, ஓரளவு தற்பெருமை உடையவர் ஆங்கிலம் கற்பித்துக் கொண்டிருந்தார். முக்காலத்தையும் நிகழ்கால, இறந்தகால, எதிர்கால (Present, Past, Future Tenses)நிகழ்வுகளை நல்ல முறையில் படிப்பித்து கொணடிருந்தார். பின்னர் மாணவரை பார்த்து "I am very beautiful" இது என்ன காலம் என்று கேட்டார்- ஒரு துடுக்கான மாணவன் எழுந்து சொன்னான் "Past tense, teacher" என்று

* * * * * * * * * * * * * * * * * * * * *

இதே போன்று ஒரு பண்டிதர் வகுப்பில் முற்காலத்தையும் படிப்பித்துக் கொண்டிரு ந்தார். ஒரு மாணவனை பார்த்து அவன் மழையில் சறுக்கி விழுந்தான் - இது என்ன காலம் என்று கேட்டார் - உடனே அவன் சொன்னான் அது மழைக்காலம், சேர் என்று. ஒரு துடுக்கான மாணவி எழுந்து சொன்னாள் - இல்லை சேர் அவனுடைய கெடுகாலம் என்று

* * * * * * * * * * * * * * * * *

ஒரு பிரபல கல்லூரியின் மாணவ ஆசிரியர் ஒருவர், ஆங்கில ஆசிரியராக ஒரு கிராமப் புறப் பாடசாலையில் ஆங்கிலம் கற்பிக்க வகுப்பறைக்குள் நுழைந்து மேசையில் அமர்ந்தார்.

உடனே மாணவர்கள் எல்லோரும் மேசையை சுற்றி வந்து நின்றனர் - அவர் அப்படியே வகுப்பை நடத்தினார் - அன்று வகுப்பில் மாணவர் வாய்ச் சண்டை முற்றி ஒரு மாணவன் இன்னொருவனைப் பார்த்து "சட்அப்" "shut up" என்றான் - வாயை மூடு என்ற கருத்தில். உடனே பக்கத்து வகுப்பில் படிப்பித்து கொண்டிருந்த தமிழ் ஆசிரியர் ஒருவர் அவனைக் கூப்பிட்டு ஏனடா அப்படி சொன்னாய் என்று கேட்டு அடித்துவிட்டார். ஆனால் அப்படிச் செய்தது தவறு. எமது மொழியில் "shut up" என்பது கெட்டவார்த்தை இல்லையே!

**தொகுப்பு: மட்டுவில் க.சி.சதாசிவம்**





கடலூர் மாவட்டம் காட்டுமன்னார் கோவிலைச் சேர்ந்த ஊனமுற்ற மாணவர் பீஷ்குமாருக்கு இரண்டு கையிலும் தலா ஒரு விரல் தான் உள்ளது. ஆனாலும், வலது கைவிரலை இடது முழங்கை முட்டியுடன் சேர்த்து எழுதிப் பழக்கப்படுத்தினார். அதே ஊரில் தனியார் பள்ளியில் 'பிளஸ் 2' படிக்கும் பீஷ்குமார் இப்போது அரசுத் தேர்வு எழுதி வருகிறார். இவரது ஊனத்துக்காக பள்ளி நிர்வாகம் இவருக்கு கூடுதலாக ஒரு மணி நேரம் தேர்வு எழுத அனுமதி பெற்றுத்தந்துள்ளது.

## புதன் பொய்கை

# இளமையில் வறுமை கண்டவர்

# இசை வளத்தால் உயர்ந்து பிரபலமானவர்

"ஞானப்பழத்தைப் பிழிந்து" என்று தொடங்கும் கே.பி. சுந்தராம்பாளின் பாடலைக் கேட்டு பக்தி பரவசத்தில் மூழ்காத முருக பக்தர்கள் எவரும் இருக்க முடியாது. சிறு வயதில் வறுமையில் வாடிய அவர் பிற்காலத்தில் நிகரற்ற பாடகியாகவும் நடிகையாகவும் திகழ்ந்தார். அவருடன் சோடியாக நடிக்க வந்து தடம் புரண்டு ஒடிய 'ராஜபாட்' நடிகர்கள் ஏராளம். நிலைத்து நின்றவர் ஒருவர். அவரே கணவராகவும் கைபிடித்த எஸ்.ஜீ. கிட்டப்பா. இந்த இசை மேதைகள் இருவரையும் ஒன்று சேர்த்து வைத்த பெருமை இலங்கை மண்ணுக்கே உரியது.

கொடுமுடியில் ஆற் றங்கரையில் ஒரு நாள் நள்ளிரவில் "இனி இந்தப் பிறவி வேண்டாம் என்று முருகனை நன்றாகப் பிரார்த்தனை செய்து கொள்," என்றாள் தாய். ஆறு வயதுச் சிறுமி சுந்தராம்பா ளுக்கு விஷயம் விளங்கி விட்டது. "அம்மா! உனக்காக நான் என்ன வேண்டு மானாலும் செய்கிறேன். ஆனால் ஆற்றில் மாத் திரம் விழ முடியாது. கஷ்டப்பட்டு சம்பாதித்து உன்னைக் காப்பாற்றுகிறேன்," என்று தாயின் காலைப் பிடித்துக் கொண்டு கதறினாள் சிறுமி. அன்னையின் மனம் மாறியது.



ஒரு நாள், தான் தங்கியிருந்தவீட்டுத் திண்ணையில் அமர்ந்து சுந்தராம்பாள் பாடினாள். எதிரே இருந்த தாலுகா ஆபீஸிலிருந்து இரு கான்ஸ்டபிள்கள் வந்தனர். ஒருவர், "பாடியது நீதானா பெண்ணே? வா, எஜமான் கூட்டி வரச் சொன்னார்," என்றார். "வர முடியாது!" என்ற பதில் கிடைத்தது. ஒரு கான்ஸ்டபிள் அவளை அலக்காகத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு பொலீஸ் அதிகாரி கிருஷ்ணசாமி ஐயரிடம் கொண்டு போனார். அவர், "உன் சாரீரம் பிரமாதமாயிருக்கிறது!" என்று புகழ்ந்து மேலும் சில பாட்டுக்களை பாடச் சொல்லி, கேட்டு மகிழ்ந்தார். ஐம்பது ரூபாயை அவர் சுந்தராம்பாளிடம் கொடுத்ததோடு, அந்தக் குடும்பத்திற்கு ஒரு மாதச் பொருள்களை வாங்கித் தருமாறு கான்ஸ்டபிளிடம் தனியாகப் பணத்தையும் கொடுத்தார்.

இந்தக் குழந்தையின் குரலைச் சிலாகித்து ஆண்டிப்பட்டி ஜமீன்தாரிடம் அந்த அதிகாரி கூற, ஜமீன்தார் ஆள் அனுப்பி, குழந்தையை அழைத்து வரச் சொன்னார். தலைப்பாட்டை-சுந்தல்பாவாடை சுந்தராம்பாளை ஜமீன்தார் அன்புடன் தமது மடியில் உட்கார்த்தி வைத்துக் கொண்டார். அப்பொழுது அங்கே முத் தையா பாகவதரின் ஹரிகதா காலட்சேபம் நடந்து கொண்டிருந்தது. "இவரிடம் நீ ஹரிகதை சொல்லிக் கொள்கிறாயா?" என்று ஜமீன்தார் கேட்டதற்கு, "இல்லை, பாட்டுத் தான் வேண்டும்," என்றாள் சுந்தராம்பாள்.

நாடகத்தில் ஆர்வம் கொண்ட சுந்தராம்பாளுக்கு சொந்த ஊரில் சும்மா இருக்கப் பிடிக்கவில்லை. யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் ஒரு நாள் ஈரோடுக்குச் சென்று, ஹார்மோனிஸ்ட் கோவிந்த ராஜுலு நாயுடு நடத்திய ஸ்பெஷல் நாடகங்களிலெல்லாம் நடித்து வந்தாள். அந்த நாயுடுகாரு, சுந்தராம்பாளை, தன் சொந்தப் பெண் என்று சொல்லிக் கொண்டிருந்தாராம். ஆனால்வீட்டில் ஏற்கனவே இருந்து வந்த அசல் 'சொந்தக் பெண்'ணுக்கு இருந்த சலுகை இந்தச் சொந்தப் பெண்ணுக்கு இல்லாததைக் கண்ட ராஜ பார்ட் தாணு அம்மாள், சுந்தராம்பாளைத் தனியாக அழைத்து, பூர்வோத்திரம் கேட்டு, மலைக்கொழுந்துவுக்கு தகவல் கொடுத்து விட்டாள். மாமா புது வைக்கு வந்து, சிறுமியை ஊருக்கு அழைத்துச் சென்றார். 'பெண் இருக்கிற இடம் தெரிந்தால் அவளைக் கொண்டே வருஷா வருஷம் அக்கினி சட்டி எடுக்கச் சொல்லுகிறேன்' என்று கரூர் மாரியம் மனுக்கு தாய் வேண்டிக் கொண்டிருந்தார். அந்த வேண்டுதல் ஆண்டு தோறும் நிறைவேற்றப்பட்டு வந்தது.

### இலங்கைப் பயணம்

ஊர் திரும்பிய சுந்தராம்பாளின் நாடகப் பைத் தியம் நிற்கவில்லை. தமது பெண்ணின் மனம் நோகாமல் இருக்கட் டும் என்று, நாடகத்தில் நடிக்க அனுமதி கொடுத்தார் தாய். ஒன்பதாவது வயதில், மூன்று வருட ஒப்பந்தப்படி, இலங்கையில் ஷண்முகம்பிள்ளையின் நாடகங்களில் நடிக்க கப்பலேறினாள் சுந்தராம்பாள். அந்தக் கம்பெனியில் ஸ்திரீபார்ட் ஏற்றிருந்தவர் டி. பி. ராஜலக்ஷ்மி, கே.பி.எஸ்ஸுக்குச் சில்லறை வேஷங்கள் தரப்பட்டன.

பன்னிரண்டாவது வயதில் இந்தியாவுக்குச் சுந்தராம்பாள் திரும்பி, தாணு அம்மாள்ரா ஜபார்டாக நடித்த நாடகங்களில், ஸ்திரீபார்ட்டாக நடித்திருக்கிறார். மீண்டும் கே.பி.எஸ்ஸுக்கு இலங்கையின் அழைப்பு வந்தது. அங்கே சென்று ஸ்திரீபார்ட்டாக நாடகங்களில் நடித்தார். 'குயிலினும் இனிய குரல் வாய்ந்த சுந்தராம்பாள் நடிப்பார் என்ற விளம்பரம் செய்யப்பட்ட இவருக்கு சரிநிகராக ராஜபார்ட் யாரும் கிடைக்கவில்லை. ஒரு நாள் கதாநாயகனாக நடிக்க வருகிறவர், கே.பி.எஸ்ஸின் குரலைக் கேட்டு வெட்கித் தலை குனிந்து, அடுத்த நாள் போய்விடுவார். அடுத்த நாள் புது ராஜபார்ட் ஒருவர் வருவார். அவரும் அப்படியே போய் விடுவார். அப்போது திருச்சியில் கன்னையா கம் பனியில் நடித்து வந்த எஸ்.ஜி. கிட்டப் பாவை, அந்தக் கம்பெனியிலிருந்து சிங்கம் அய்யங்கார் பிரித்து, இலங்கையில் மூன்று ஸ்பெஷல் நாட கங்களில் நடிக்க அவரிடம் ஒப்பந்தத்தில் கையெழுத்து வாங் கினார். கிட்டப்பா ராஜபார்ட்-சுந்தராம்பாள் ஸ்திரீ என்ற விளம் பரப் [illegible] மலைக்கொழுந்துவுக்குக் கிடைத்தது. இதைப் பார்த்து அவர் நடுங்கிப் போனார். "சூரன் [illegible]" என்று, நாடகத்தை நிறுத்தி விட இலங்கைக்கு வந்தார் மலைக்கொழுந்து. "அந்தக் கந்தர்வனிடம் உன் பாச்சா பலிக்காது, நீ வீட்டுக்குத் திரும்ப வேண்டியதே. நடிப்பு ஒப்பந்தத்தை ரத்துசெய்" என்று அவர் சுந்தரியிடம் கூறிய தற்குப் பலன் கிடைக்கவில்லை.

"இலங்கையில் சுந்தராம்பாள் கொடிபறக்கிறது! நீ போய்ச் சிக்கிக் கொள்ளாதே!" என்று கிட்டப்பாவையும் நண்பர்கள் எச்சரித்தார்கள். அதற்கும் பலன் கிடைக்கவில்லை. நண்பர்களின் யோசனைப்படி கிட்டப்பா நாடகத்திற்கு முதல் நாள் தமது சகோதரர் அப்பாத்துரை ஐய்யருடன் சுந்தராம்பாளைக் காணச்சென்றார். அறிமுகம் ஆயிற்று. ஒத்திகை நடத்தக் கிட்டப்பா விரும்பினார். அவ சியமில்லை என்றார், 16 வயது சுந்தராம்பாள். தனது குர லில் பூரண நம்பிக்கை கொண்டிருந்த கிட்டப்பா, 'அப்படியானால் ரொம்பச் சரி' என்று சொல்லிவிட்டார்.

முதலில் "வள்ளி திருமணம்" கொழும்பில் நடந்தது. பிரவேசப் பாட்டு, "சாக்ஷாத்கார நீ" கீர்த்தனம். "மோக்ஷமுகலதா" என்று கிட்டப்பா ஆரம்பித்ததும், ஏற்கனவே அவரது தோற்றத்தைக் கண்டு மயங்கியிருந்த சுந்தராம்பாள், அவரது குரலைக் கேட்டுச் சொக்கிப் போனார். "இவருடன் ஒத்துப்போய், சமமாக நடிக்க வேண்டும்" என்று பிரார்த்தனை செய்துகொண்டார்.

### சேர்ந்து நடிக்கத் தீர்மானம்

சுந்தராம்பாளின் பாட்டைக் கேட்டுக் கிட்டப்பா மயங்கினார். பரஸ்பரபாராட்டுக்கள்! கிட்டப்பாவுடன் சேர்ந்து நடிக்க ஆரம் பித்த பின் சுந்தராம்பாளின் சங்கீத ஞானம் அதிகமா யிற்று.

கே.பி.எஸ். தமது 17ஆவது வயதில் கிட்டப் பாவை முறைப்படி திருமணம் செய்து கொண்டார். "அதிலிருந்தே எல்லாப் பாக்கியங்களும் எனக்குக் கிடைத்தன. எனக்குக் குருவும் நாதனும் அவரே. அவரது கரத்தை நான் பிடித்ததற்கும் முருகன் அனுக்கிரகமே காரணம்," என்றார் சுந்தராம்பாள். ஒரு வருடத்தில் தலைச்சனாக ஆண் குழந்தை பிறந்தது. ஆனால் பத்து நாள்களில் இயற்கை எய்திற்று. பிறகு பிறந்த இன்னொரு சிசுவுக்கும் அதே கதி ஏற்பட்டது. 1933 இல் கிட்டப்பா கால மானதும் சுந்தராம்பாள் தீராத சோகத்தில் ஆழ்ந்தார்; துறவுக் கோலம் பூண்டார். முருகனிடம் ஈடுபாடு அதிகமாயிற்று.

இவர் சிறந்த தேசபக்தர். தேசபக்திப் பாடல்கள் பாடி, மக்களிடையே சுதந்திரப் பற்றை வளர்த்தவர். நாட்டுக்காகக் கஷ்டப்பட்டவர்களின்குடும்பமும் கஷ்டப்படலாகாது என்று சில குடும்பங்களுக்கு உதவியுள்ளார். சத்தியமூர்த்திக்குத் தியாகராஜ நகரில் நாலரை கிரவுண்டு மனையை அன்பளிப்பாகக் கொடுத்திருக்கிறார்.

இவரது பண்புக்கும் மனப்பக்குவத்திற்கும் ஏற்ற பாகமாகிய ஒளவையாராக இவர் தோன்றி நடித்திருப்பதைத் தமிழகம் மறக்கவே மறக்காது. 1956 ஆம் ஆண்டில் சுந்தராம்பாளுக்கு, தங்கப் பதக்கத்தை அளித்த சென்னை அரசு, பின்னர் சென்னை மேல் சபையில் அங்கத்தினர் பதவியையும் அளித்திருந்தது. ★

## சுந்தராம்பாள்-கிட்டப்பா உறவு இலங்கை மண்ணிலேயே முகிழ்த்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)

## கட்டட புனர்நிர்மாணத்திற்கான கூறுவிலை கோரல்

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமாக யாழ்.பிரதான வீதியில் (வஸ்தியன் சந்திக்கு அண்மையில்) அமைந்துள்ள கட்டடத்தினை புனரமைப்புச் செய்வதற்கு பின்வரும் வேலைகளுக்கான ஒப்பந்தகாரரிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது.

01. மேசன் வேலை
02. தச்சு வேலை
03. வர்ணம் பூசுதல்

விவரங்களுக்கு சங்கத் தலைமை காரியாலயத்திற்கு நேரடியாக வருகைதருவதுடன் வேலை விவரங்களையும் இடத்தையும் பார்வையிட்டு சமர்ப்பித்துக் கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 2008.03.15

பொது முகாமையாளர்,
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து).
11.03.2008 (சி/551795)

## கூறுவிலை கோரல்

36000 BTU Split Type Airconditioner Compressor இற்கான கூறுவிலை தகுதியான வழங்குநரிடமிருந்து வைத்தியசாலைப் பணிப்பாளரினால் கோரப்படுகின்றது. தங்களது கூறுவிலையை 19.03.2008 முற்பகல் 10 மணிக்கு முன்பாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும் . கூறுவிலை தங்கள் முன்னிலையில் 19.03.2008 முற்பகல் 10.30இற்கு திறக்கப்படும்.

பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். (சி/551799)

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 05 . 05 . 1931



இறப்பு 28 . 02 . 2001

### அமரர் தளையசிங்கம் அழகரெத்தினம்

(ஆராய்ச்சியாளர், யாழ்.மாநகரசபை)

அன்பின் இலக்கணமாய் வாழ
வழிகாட்டிய அன்புத் தெய்வத்தின்
பாச நினைவுகள்.....

நல்லூர்,
யாழ்ப்பாணம். (71952) குடும்பத்தினர்.

## முதலாம் வருட நினைவஞ்சலி

தாய் மடியில் 04 . 09 . 1969



ஆண்டவன் மடியில் 12 . 03 . 2007

### அமரர் யோசெவ் பெல்டானோ லோறன்ஸ் மரியசெல்வம்

ஓராண்டு மறைந்தாலும் ஒழிந்திடுமா உன்நினைவு
ஒற்றர்கள் மறைத்தனரோ ஒளிதரும் உன் நிழலை?
பூமியில் நல்லோரைப் படைத்ததுதான் ஏனோ?
பாதியிலே அவர்களை பறிப்பதற்கா படைத்தாய்
அறியாது செய்தாயோ அறிவிலிக்கு அனுசரணையா
அறியாது செய்தோரை பரிந்துரையும் புரிந்தாயோ
நம்மவரும் ஏதுசெய்ய உம்மிடமே வேண்டுகின்றோம்.

*அமரர் யோசெவ் பெல்டானோ லோறன்ஸ் மரியசெல்வத்தின் ஓராண்டு நினைவஞ்சலி ஆத்ம இளைப்பாற்றிற்கான இரங்கற் திருப்பலியிலும், மதிய உணவிலும் கலந்து ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.*

என்றும் உமது நினைவில் வாழும்:
மனைவி,
அம்மா, சகோதரர்கள்,
மருமக்கள், பெறாமக்கள்.

607, அரசடி வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய். (71955)

## அறவழி தொழில் பயிற்சியகம் நுணாவிலில் திறப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்12

கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனமும் அறவழிப் போராட்டக் குழு வும் இணைந்து கைதடி-நுணாவில் அற வழி நிலைய வளாகத்தில் நிர்மாணித்த அறவழி தொழில் ப்யிலகக் கட்டடம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

அறவழி நிலையத் தலைவர் வீ. ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவன பிரதி வெளிக்களப் பணிப்பாளர் (வடக்கு) வே. ஜெயராஜசிங்கம் கலந்து கொள்வார்.

அறவழிநிலையத்தினால் நடத்தப்பட்டு வரும் பயிற்சி நெறிகளில் கலந்து கொண்ட பயி லுநர்கள்இந் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர். (203-207)

## தேவை

Book Binding மற்றும்Computer Type Setting தெரிந்தவர்கள் தேவை. முன் அனுபவம் விரும்பத்தக்கது.

தொடர்பு: ஸ்ரீசாயி அச்சகம்
நந்தாவில் அம்மன் கோயிலடி,
கொக்குவில் கிழக்கு.
T.P: 021 4590244 (71956)

## விற்பனைக்கு

புதிய $A_3$ லெமினேற்றிங்மெசின்கள் விற்பனைக்கு உண்டு,விலை16,500/=

தொடர்பு:
சித்தி விநாயகர் ஸ்ரேசனரீஸ்
இல. 16,கே.கே.எஸ் வீதி,சுன்னாகம். (71954)

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் உள்ளூராட்சி உதவியாளராக கடைமையாற்றும்
*செல்வி இ.அமிர்தராணி*
அவர்களின் பாசமிகு தாய்

### திருமதி சிதம்பரநாயகி இரத்தினவடிவேல்

இறையடி சேர்ந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நகராட்சி மன்றம்,
வல்வெட்டித்துறை.
(71962)

செயலாளரும்,
சகஉத்தியோகத்தர்கள்,
ஊழியர்களும்.

## கண்ணீர் அஞ்சலி



எமது செயலக
உத்தியோகத்தர்
*துரைசிங்கம்*
*பிரபாசன்*
அவர்களின் அன்புத்
தந்தை

அமரர்

### சின்னத்துரை துரைசிங்கம்

அவர்கள் 11.03.2008 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தமையையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும், ஏனைய
உத்தியோகத்தர்களும்
வலிகாமம் மேற்கு பிரதேசசெயலக
உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,
சங்கானை.

## கண்ணீர் அஞ்சலி



### உயர்திரு.கி.சிவநேசன்

(நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்.மாவட்டம்)

*அண்மையில் அகால மரணமான உயர்திரு கி.சிவநேசன் (நா.உ.) அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு வித்தியாலயத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
...தினர்,
பழைய மாணவர்கள்.
அல்வாய். (சி/551801)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீராத மூலவியாதியால் அவதிப்படுவோரின் கவனத்திற்கு....!

இரசாயன முறையில் மூலரோக நிவாரணம்

மூல ஆர்சிஸ் இரசாயன மற்றும் மூலரோக பஸ்பம்

மூலரோக சம்பந்தமான வியாதிகளை உடன் குணப்படுத்தும்

மூலரோகம் என்பது பரம்பரை வியாதி-இதனால் ஆரம்பத்தில் சிறு கட்டிகளை உண்டாக்கும். அத்துடன் எரிச்சல் கூடின மலம்போக்குத் தன்மை, சீதம்போக்கு, குடல்இறக்கம், குடலில் வாய்வு நிரம்புதல் போன்ற வியாதிகளை இம்முறையினால் குணப்படுத்த முடியும். மேலும் சிறுநீர் எரிச்சல், சிறுநீர் தடங்கல் போன்ற வியாதிகளையும் குணப்படுத்தக் கூடியது. உடன் பாவித்து குணம் பெறுங்கள்.

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured by:
Kadahapola Dharmarathne
Aushadalaya
Kuliyapitiya Road, Kadahapola,
Narammala.

யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்கள்
சிவா நறுமணைப் பூங்கா
இல,288 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நீகோட்)
## வேலைத்தள பொறியியலாளருக்கான பதவி வெற்றிடம்

நீகோட் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் வேலைத்தள பொறியியலாளருக்கான பதவி வெற்றிடத்தினை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரபப்படுகின்றன. விண்ணப்பதாரிகள், கல்வித்தகைமைகள், தொழில்சார் தகைமைகள், பிறந்த திகதி மற்றும் வேண்டிய தகவல்கள் அடங்கியதாக சுயவிவரப் பட்டியலைத் தயாரித்து 25.03.2008ஆம் திகதிக்கு முன்பதாக பிரதித் திட்டப் பணிப்பாளர், நீகோட், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் எனும் விலாசத்திற்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வேலைத்தள பொறியியலாளர் பதவிக்கான விண்ணப்பம்'' எனக் குறிப் பிடப் பட்டிருத்தல் வேண்டும்.

கல்வித் தகைமை - *அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் B.Sc. Civil Engineering பட்டம்*

தெரிவுமுறை - *தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு மிகவும் பொருத்தமான விண்ணப்பதாரிகள் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.*

க.கணேஷ்
அரசாங்கஅதிபர்,
யாழ்ப்பாணமாவட்டம். (சி/551792)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை துரைசிங்கம்



ஏழாலை, மயிலங்காட்டைப் பிறப்பிடமாகவும் கட்டுடை, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை துரைசிங்கம் நேற்று (11.03.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் பிரபாசன் (முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், சங்கானை), பிரதீபன் (இயந்திர இயக்குனர் ஸ்மாட் பிறின்டேர்ஸ், யாழ்ப்பாணம்), பிரகலாதன், அபிராமி (HNDM இறுதி வருட மாணவி, யாழ் உயர் தொழில் நுட்ப நிறுவனம்), அனித்தா (மாணவி, கலைப்பிரிவு 2009, யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா-தங்கம்மா தம்பதியரின் அருமை மருமகனும் காலஞ்சென்ற கணேசரத்தினம் மற்றும் பரமேஸ்வரி, நாகரட்ணம் (J.P. ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர், திருமலை), சந்திரவதனம், காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சரஸ்வதி, காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் தவமணி, வேலுப் பிள்ளை, வள்ளி யம்மை, பூபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2008) புதன் கிழமை நண்பகல்12மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*நவாலி வீதி,*
*கட்டுடை,*
*மானிப்பாய்.* (71900)

*தகவல்:*
குடும்பத்தினர்.

### வேலுப்பிள்ளை வைத்திலிங்கம்



அளவெட்டி, செட்டிச் சோலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை வைத்திலிங்கம் 10.03.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லத்துரை-பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வமலரின் அன்புக் கணவரும், மகேஸ்வரன், அஜந்தன் (அளவெட்டி ப.நோ.கூ.ச.), தனுசன் (மாணவன், அருணோதயாக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் இளையதம்பி, இரா சம்மா, கனகம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஸ்ரீகாரணி (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை) பாசமிகு மாமனும் கருணிஜாவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.03.2008 திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் அளவெட்டி தெற்கு வைரவர்அடைப்பு இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அளவெட்டி. (71953)

*தகவல்:*
குடும்பத்தினர்.

# 'வடக்கின் பெரும் போர்' துடுப்பாட்டம் நாளைமுதல் மூன்று தினங்கள் சென்றலில்!

## கோலாகலம் இன்றி அமைதியாக நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச்12

**'வடக்கின் பெரும் போர்' என வர்ணிக்கப்படும் யாழ்.மத்திய கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 102ஆவது துடுப்பாட்டம் நாளை ஆரம்பமாகிறது. இந்த ஆட்டம் மூன்று நாள்கள் தொடர்ந்து இடம்பெறும்.**

இந்த வருட ஆட்டத்தில் சென்றல் அணிக்கு பாஸ்கரன் டயானும் சென். ஜோன்ஸ் அணிக்கு மாசிலாமணி கரிபிரவீனும் தலைமை வகிக்கின்றார்கள்.

இரு அணிகளுமே சமநிலையில் காணப்படுகின்றன. ஆனாலும் கூட சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி அரைச்சதங்கள் பெற்ற வீரர்களுடன் பந்துவீச்சிலும் கூட திறமைமிக்க வீரர்களைக் கொண்டுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் இவர்களுக்கு சளைத்தவர்கள் என்று கூறிவிட முடியாது. இவர்களும் இதுவரை இடம்பெற்ற போட்டிகளில் தமது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

இரு அணிகளுக்கும் தலைமை வகிக்கும் இருவரும் கடந்த ஆண்டுகளில் இடம்பெற்ற போட்டிகளில் கலந்துகொண்ட அனுபவம் வாய்ந்தவர்கள்.

இந்தாண்டில் யாழ்.மத்திய கல்லூரி ஏழு போட்டிகளில் கலந்துகொண்டு மூன்று போட்டிகளில் வெற்றி பெற்றும் ஏனைய நான்கு போட்டிகளைச் சமப்படுத்தியும் உள்ளது.

சென்.ஜோன்ஸ் கல்லூரியைப் பொறுத்த வரையில் ஏழு போட்டிகளில் கலந்து கொண்டு இரண்டு போட்டிகளில் வெற்றியையும் இரண்டு போட்டிகளில் தோல்வியையும் மூன்று போட்டிகளில் வெற்றி தோல்வியின்றி சமநிலைப்படுத்தியும் உள்ளது.

குடாநாட்டில் இடம்பெற்றுவரும் முக்கியத்துவம் வாய்ந்த போட்டிகளில் மூன்று நாள்கள் இடம்பெறும் ஒரு ஆட்டமாக இப்போட்டி அமைந்துள்ளது.

1904ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தத் துடுப்பாட்டத்தில் 2007ஆம் ஆண்டு வரை 101 போட்டிகள் இடம்பெற்றுள்ளன. யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி 33 போட்டிகளிலும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 23 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளன.

37 போட்டிகள் முடிவுகள் எட்டப்படாமல் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன.

இந்தாண்டு இடம்பெறும் போட்டி நாட்டுச் சூழ்நிலை காரணமாகச் சற்று அமைதியான முறையில் இடம்பெறுகின்றது.

கடந்த காலங்களில் ஒரு வாரத்திற்கு முதலே கல்லூரிகளின் மாணவர்கள் பாடசாலை பஸ் வண்டிகள், சைக்கிள்களில் கொடிகளைப் பறக்கவிட்டு கோலாகலமான கொண்டாட்டமாகத் துடுப்பாட்டத்தைக் கொண்டாடுவார்கள்.

நகரம் முதல் கிராமம் வரை இப்போட்டிகள் எழுச்சி பெற்றுக் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (1-86)

*ஆரம்ப நிகழ்வு: நாளை காலை 8.30 மணி*
*ஆட்ட நேரம்: 9.00 - 12.00, 12.45 - 2.45, 3.20 - 4.00*
*(தினமும் 90 பந்துப் பரிமாற்றங்கள்)*



**சென்.ஜோன்ஸ் அணி**

*அமர்ந்திருப்பவர்கள் (இ.வ)* - கே.எஸ்.முகுந்தன் (பயிற்சியாளரும் பொறுப்பாசிரியரும்), எம்.கரிப்பிரவீன் (அணித்தலைவர்), வண.என்.வி.ஞானப்பொன்ராஜா (அதிபர்), வி.பிரணவன் (உப அணித்தலைவர்), கே.ஜனுசன், வி.எஸ்.பி.துசீதரன் (விளையாட்டுத்துறை மாணவர் தலைவர்).
*நிற்பவர்கள் முதலாம் வரிசை (இ.வ):* ஈ.லாருஷன், ஈ.தவநீதன், எஸ்.சுகதாஸ், கே.அச்சுதன், ஆர்.ஹஜீபன், கே.யோகீஸ்வரன், வி.ஹரிவதனன்.
*நிற்பவர்கள் 2ஆம் வரிசை(இ.வ):* ஏ.விதுஷன், ஜே.ஆதிரியன், ரி.இவோன்ஷன், பி.ஜயந்தன், எஸ்.சுதாகரன், எஸ்.அலெக்ஸதியோன்.



**சென்றல் அணி**

*அமர்ந்திருப்பவர்கள் (இ.வ)* - ஈ.எஃப்.ஆர்.ஜெயகுமார் (பொறுப்பாசிரியர்), எஸ்.சுரேஷ்மோகன் (பயிற்சியாளர்), பி.டயான் (அணித்தலைவர்), எஸ்.பத்மநாதன் (அதிபர்), என்.நவநீத் (உப தலைவர்), கே.ஷெல்டன், வி.எஸ்.மகேந்திரன் (விளையாட்டுக்கான மாணவர் தலைவர்).
*நிற்பவர்கள் முதலாம் வரிசை (இ.வ):* பி.சிவஷங்கர், ரி.நிமல்ராஜ், ரி.சிவகரன், ஜே.ஆர்.டேனியல் நிதர்ஷன், ரி.நிமால்காந்த், எம்.ஸ்டீபன்ராஜ், எஸ்.அலன்குமார், ஜி.ஜெரிக்துசன், கே.பிரதீபன்.
*நிற்பவர்கள் 2ஆம் வரிசை (இ.வ.):* என்.ஜெனோசன், ஆர்.கோபிகன், என்.லவநீதன், எஸ்.ஜேம்ஸ்ஜான்சன், எஸ்.தனுஜன்.

# கரையோரக் கிராமங்களுக்குள் கடல்நீர் புகுவதை தடுப்பதற்கு அணைகள் அமைக்க நடவடிக்கை

## 'நியாப்' திட்டத்தில் 7 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,மார்ச்12

குடாநாட்டின் கரையோரக் கிராமங்களுக்குள் கடல்நீர் புகுந்து அப்பகுதிகள் உவராகும் நிலைமை கண்டறியப்பட்டு, அதனைத் தடுப்பதற்கெனத் தடுப்பணைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

'நியாப்' திட்டத்தின் மூலம் இதற்கான வேலைகளை மேற்கொள்வதற்கு 7 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று நியாப் திட்ட யாழ்.மாவட்டப் பணிப்பாளர் எஸ்.விஸ்வலிங்கம் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இவ்வேலைத்திட்டம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

கடல்நீர் கிராமங்களுக்குள் புகுவதால் பண்ணையில் இருந்து வேலணை வரையான கரையோரப் பகுதிகளில் உள்ள மேய்ச்சல் தரைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் குடிதண்ணீர் கிணறுகளும் உவராகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

தீவகம், காரைநகர், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பிரதேசங்களில் உவர்நீர் உட்புகும் இடங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

இதனைத் தடுக்கும் நோக்குடன் முதற்கட்டமாகப் பண்ணையில் இருந்து வேலணை வரை கடற்கரை ஓரமாகத் தடுப்பு அணைகள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கென படையினரும் அனுமதி வழங்கியுள்ளனர். விரைவில் வேலைகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. - என்றார் அவர். (203)

## முகாமைத்துவ உதவியாளர் சேவை நேர்முகத்தேர்வுக்குத் தோற்றாதவர்களுக்கு

யாழ்ப்பாணம்,மார்ச்12

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற முகாமை உதவியாளர் சேவை IIIஇற்கான நேர்முகத் தேர்வில் சமுகமளிக்கத் தவறியவர்களுக்கு எதிர்வரும் 18 ஆம் திகதி நேர்முகத் தேர்வு வட மாகாண பொது நிர்வாகச் செயலகத்தில் இடம்பெறவுள்ளது. காலை 9 மணிக்கு நடைபெறும் இந்த நேர்முகத் தேர்வில் முன்னர் தோற்றத் தவறியவர்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)

# பதவி வெற்றிடங்கள்: விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,மார்ச்12

அரச அச்சுத் திணைக்களத்தின் இலங்கை அச்சிடற் சேவை வகுப்பு III தரம் III இன் இயந்திர இயக்குநர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இயந்திர இயக்குநராகக் குறைந்தது 10 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரியின் அச்சிடற் தொழில் தொடர்பான 3 வருட பாடநெறிகளைப் பயின்ற பின் வழங்கப்பட்டதான சான்றிதழைக் கொண்டிருத்தல். அத்துடன் இயந்திர இயக்குநராக 5 வருட தொழில் அனுபவத்தைக் கொண்டிருப்பவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பதாரி 04.04.2008ஆம் திகதியன்று 45 வயதுக்குட்பட்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை அடுத்த மாதம் 4ஆம் திகதிக்கு முன்னர் 'அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், அஞ்சல் பெட்டி 507, இல.118, டாக்டர் டனிஸ்டர் டீ.சில்வா மாவத்தை, கொழும்பு - 8' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 07.03.2008ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (202)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்12

மறியற்சாலைகள் திணைக்களத்தின் மறியற்சாலைக் காவலாளர், பெண் காவலாளர் பதவிகளுக்காக நடத்தப்படவுள்ள திறந்த ஆள்சேர்ப்புப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம்/தமிழ் மற்றும் கணித பாடங்கள் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். 2 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை அடுத்த மாதம் 8ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் 'பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்புகள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

# சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கு ஜனவரி மாதப் புள்ளி வெட்டப்பட்டே முத்திரைகள்

யாழ்ப்பாணம்,மார்ச்12

குடாநாட்டில் சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான முத்திரைகளில் ஒரு மாதத்திற்கான புள்ளி வெட்டி எடுக்கப்பட்ட பின்பே அவை வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் வழங்கப்படவேண்டிய சமுர்த்தி நிவாரண முத்திரையே தற்போது பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

ஒரு மாத நிவாரணம் வழங்கப்படாது புள்ளிகள் வெட்டி எடுக்கப்பட்டுள்ளமை பற்றிய விவரம் உரிய சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுக்குத் தெரியாத நிலைமையே காணப்படுகின்றது.

உரிய அதிகாரிகளிடம் தொடர்புகொண்டு கேட்டபோது கடந்த டிசெம்பர் மாத நிவாரணம் சமுர்த்தி அமைச்சின் பணிப்புரைக்கு அமைவாக இலங்கை முழுவதிலும் நிறுத்தப்பட்டுள்ளது.

குடாநாட்டில் டிசெம்பர் மாத சமுர்த்தி முத்திரைக்கான நிவாரணம் வழங்கப்பட்டது. சமுர்த்தி முத்திரை உரிய காலத்திற்கு வராது பிந்தி வந்துள்ளமையால் தைமாத நிவாரணம் வழங்கப்படவேண்டிய புள்ளி வெட்டி எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

வறுமையிலும் வறுமையான மக்களுக்கே சமுர்த்தி நிவாரண முத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

உரிய அரச அதிகாரிகள் உயர் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு வெட்டப்பட்டுள்ள ஜனவரி மாதத்திற்கான சமுர்த்தி நிவாரணம் கிடைக்க ஆவண செய்ய வேண்டும் என மக்கள் தரப்பில் கோரப்பட்டுள்ளது. (203)

## யாழ்.பல்கலைக்கழகத்தின் ஊழியர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்12

யாழ். பல்கலைக்கழகத்தில் சேவையில் இருந்து கடந்த ஆண்டுகளில்ஓய்வு பெற்ற மற்றும் 25 வருட சேவையைப் பூர்த்தி செய்த ஊழியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் சங்கத் தலைவர் க. நாகஜெயகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு

நெல் அவித்துக் குத்தும் மில்லாகவோ அல்லது களஞ்சியமாகவோ பாவிப்பதற்கு உரிய முறையில் மில் ஒன்று ஒப்பந்தமுறையில் வழங்குவதற்கு சுன்னாகத்தில் உள்ளது. தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**நாகம்ஸ் பாட்டா**
*இல. 11, நவீன சந்தை,*
*சுன்னாகம்.*
T.P. 0777 922 5617 (71802)


## மரண அறிவித்தல்

### சபாபதி சீவரட்ணம்



வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சபாபதி சீவரட்ணம் 09.03.2008 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சுசீலாதேவியின் அன்புக் கணவரும் பிறேமநாத், திருவருட்செல்வி, சிவச்செல்வி, கோபிநாத், ரங்கநாத், சுமதி, லவன், கலைச்செல்வி ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரகுமார், ஜெகதீஸ்வரன், பிரதீபா, திருமதி பிறேமநாத் ஆகியோரின் அன்பு மாமனும் ஜெயம், சானுஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2008) புதன்கிழமை மு.ப.11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாளையம்பதி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*வேலணை.* (71882) மனைவி, ரங்கநாத் *(மகன்- மொற்ரா).*

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

வையகம் 14 - 02 - 1924 வானகம் 22 - 02 - 2007



### திருமதி செல்லையா பாக்கியம்

(ஓய்வுபெற்ற பரிசாரகர், போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்)
திதி: பஞ்சமி

ஓராண்டு போனதுவே
ஒளி விளக்கு அணைந்துபோய்
ஒரு மகள் இருக்கின்றேன்
ஓயாமல் நினைப்பதற்கு

6/2, பழம்வீதி, மகாலட்சுமி *(மகள்)*
கந்தர் மடம், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
யாழ்ப்பாணம். (69287) பெறாமகன் *(புலேந்திரன்).*

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 11 - 06 - 1944 மறைவு 11 - 02 - 2008



### அமரர் கனகன் சின்னத்துரை

கடந்த 11.02.2008 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (12.03.2008) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மருதங்குளம் வீதி,
மட்டுவில் தெற்கு, தகவல்:
சாவகச்சேரி. (71886) மனைவி, பிள்ளைகள்.


## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர். (71770)

## வீடு வளவு விற்பனைக்கு

சுன்னாகம் கதிரமலைச்சிவன் கோயிலடியில் 2½ பரப்பு வீடுவளவு விற்பனைக்குண்டு

தொடர்பு: **வே.நவரத்தினம்,**
*கதிரமலைச்சிவன் கோயிலடி,*
*சுன்னாகம்.* (71891)

## தேவை

ஐஸ்கிரீம் தயாரிப்பாளர், சமயல்காரர் தேநீர் தயாரிப்பாளர், பில்கிளாக், சப்பிளையர் மற்றும் பணிப்பெண் உடன் தேவை.

தொடர்பு: **பழமுதிர்ச்சோலை,**
*624, பருத்தித்துறை வீதி, நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (71868)

## விற்பனைக்கு

9 ஸ்ரீ XXXX தொடர் இலக்கமுடைய வொக்சோகன் - 1300 மொடல் கார், மற்றும் L.G.29" T.V, LG குளிரூட்டி போன்றவை உடன் விற்பனைக்கு.

தொடர்பு: **பழமுதிர்ச்சோலை,**
*624, பருத்தித்துறை வீதி, நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (71868)

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.

* **ராஜீவ்** - நவாலி வீதி, ஆனைக்கோட்டை
* **மதுரா** - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
* **திருமகள் களஞ்சியம்** - சிவலிங்கப்புளியடி
* **P.ரவி** - தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி
* **சிற்றி பாம் ரேடேர்ஸ்** - கல்வியங்காடு.

(71767)


## வலிகாமம் வலைபந்தாட்டம் நாளையும் மறுதினமும்

வலி.வடக்கு,மார்ச்12

வலிகாமம் வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நாளையும் நாளை மறுதினமும் காலை 8 மணிமுதல் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

15, 16, 17 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே இடம்பெறவுள்ள இப்போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் 12 அணிகளாக 36 அணிகள் கலந்துகொண்டு போட்டியிடவுள்ளன.

சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில் தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் அணிகள் இப்போட்டியில் கலந்து கொள்ளவுள்ளன.

உரிய அணிகள் அனைத்தையும் குறிப்பிட்ட நேரத்திற்கு மைதானத்திற்கு சமுகமளிக்கும்படி வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் மு.நடராசா கேட்டுள்ளார். (1-86)

## சமய சந்நிதிகளில்

வலி.தென்மேற்கு,மார்ச்12

வடலியடைப்பு - பாரத்தனை பூர்ணா புஷ்பகலா சமேத ஹரிஹர புத்திர ஐயப்ப சுமாமி ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி அலங்காரத் திருவிழா பூர்த்தி, திருக்கலியாணம், சாஸ்தா படலம், புராணப் படிப்பும் என்பன நடைபெறும்.

எதிர்வரும் 31ஆம் திகதி குளிர்த்தி நடைபெறும். (203-135)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்12

பருத்தித்துறை, சக்கோட்டை புனித பிரான்சிஸ் . சவேரியார் ஆலய வருடாந்த திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் இன்று மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.

நாளை வியாழக்கிழமை காலை 7 மணிக்கு திருவிழா திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் சொரூப ஆசீரும் இடம் பெறும். பிற்பகல் 5 மணிக்கு விருந்துபசார நிகழ்வுடன் திருவிழா நிறைவடையும் இந்த ஆலய பெருந்திருவிழா கடந்த 4ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியிருந்தது. (203)



## IIS இன் கணனிக்கற்கைநெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பம்.

பிரிவு 1: 08/03/2008
பிரிவு 2: 14/03/2008 பகல் 10.00மணி

### Courses

1. Diploma in Microsoft Office
2. Diploma in Desktop Publishing
3. Diploma in InterNet Technology
4. Diploma in Hardware Technology
5. Diploma in Eng.Drawing & AutoCAD
6. Diploma in Computerized Accounting

"IIS உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி"



INSTITUTE OF INFORMATICS STUDIES
#100, CLOCK TOWER ROAD,
JAFFNA
T.P.No:021 222 2831


## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 - 11 - 1938 உதிர்வு 08 - 03 - 2003



### அமரர் வேலுப்பிள்ளை சின்னத்துரை

(இளைப்பாறிய கிராமசேவை நிர்வாக உத்தியோகத்தர், சமாதான நீதிவான், சத்தியப்பிரமாண மொழிபெயர்ப்பாளர்)

திதி: 12.03.2008

வஞ்சமிலா நெஞ்சமுடைய அஞ்சா நெஞ்சனே!
குஞ்சரமுகத்தான் பூசகரின் அருந்தவப் புதல்வனே!
ஐங்கரன் அருளால் ஐவராய்ப் பிறந்தோம் எம்மை விட்டு
அஞ்சாமல் நீ முந்திச் சென்ற வழியில் நாமிருவர்
எஞ்சி நின்று உந்தன் நினைவில்
ஐந்து ஆண்டுகளாய் வாடி வதங்குகின்றோம் எங்கள்
நெஞ்சு குளிர்விக்க எம்மிடம் ஓடி வாராயோ?

உன் ஆன்மா சாந்தியடைய
என்றும் இடையறாது பிரார்த்திக்கும்

வாதரவத்தை, வே.தர்மராசா *(அண்ணன்)*
புத்தூர். இ.பொன்னம்மா *(அக்கா)*
(71584)

## நெஞ்சினில் நிறைந்த நினைவலைகள்

3ஆம் ஆண்டு — மலர்வு 20 - 08 - 1925 உதிர்வு 13 - 03 - 2005



### அமரர் வேலன் பிள்ளையான்

(முன்னாள் ஓய்வூதியர், இலங்கைப் புகையிரதப் பகுதி)
திதி: பூர்வபக்க பஞ்சமி

9ஆம் ஆண்டு — மலர்வு 22 - 05 - 1932 உதிர்வு 26 - 11 - 1999



### திருமதி சரஸ்வதி பிள்ளையான்

திதி: சஷ்டி

அன்புடன் அரவணைத்து எமை வளர்த்துவிட்டு
பாரினிலே வாழ வைத்துவிட்டு சென்ற திருவுருவங்களே!
நடமாடிய உங்கள் வீட்டில் படமாகிச் சென்றதேனோ?
ஆண்டுகள் மூன்று சென்றதையா ஆறவில்லை எம்துயரம்
ஒன்பதாண்டு சென்றதம்மா ஓயவில்லை எம்விழிநீர்!
மருதடி விநாயகன் மலரடியே தஞ்சமென சென்றுவிட்ட உங்களை நினைந்துருகும்

சரஸ்வதி வாசம், பிள்ளைகள்,
மானிப்பாய் ரோட்,
சண்டிலிப்பாய். மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வல்வெட்டித்துறை கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலையின் மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன. நிகழ்வில் மாணவர்களின் கயிறு இழுத்தல் போட்டி இடம்பெறுவதை முதலாவது படத்திலும் ஓட்டப் போட்டியை இரண்டாவது படத்திலும் உடற்பயிற்சி அணி வகுப்பை மூன்றாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: சுந்தா)*

# மானிப்பாய் இந்து - ஸ்கந்தா ஆட்டம் சமநிலையில் முடிந்தது

## லதீஸ் அரைச்சதம் போட்டார்

யாழ்ப்பாணம்,மார்ச்12

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையில் இடம்பெற்ற கிரிக்கெட் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் ஆட்டம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மானிப்பாய் இந்துக் கல்லூரி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

லதீஸ் 51 ஓட்டங்களையும் லோரன்ஸ் 25 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் ஹரிதரன் 4 விக்கெட்டுகளையும் குணசீலன் 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றது

ஹரிதரன் 42 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பெஞ்ஜோய் 4 விக்கெட்டுகளையும் விஸ்ணுபிரகாஸ், ரஜீவன் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இரண்டாம் இன்னிங்ஸை ஆரம்பித்த ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆட்டநேரம் முடியும்வரை துடுப்பெடுத்தாடி 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 88 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

லதீஸ் 15 ஓட்டங்களையும் லோரன்ஸ் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யாழினியன் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

ஆட்டநேரம் முடிவடைந்ததால் போட்டி சமநிலையில் முடிவுற்றது. (1)

# வலிகாமம் வலயத்தில் சதுரங்கப் போட்டி

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற ஆண்களுக்கான சதுரங்கச் சுற்றுப் போட்டியில் 19 வயதுப் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வலயச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் பத்துப் பாடசாலைகளின் அணிகள் கலந்துகொண்டன.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 21 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 19 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் இணுவில் மத்திய கல்லூரி 14.5 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும், உடுவில் மான்ஸ் வித்தியாலயம் 12 புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. (1-86)

# தெல்லிப்பழை பிரதேச வலைபந்தாட்டம்; யூனியன்ஸ் வி.க. கேடயத்தை வென்றது

வலி.வடக்கு,மார்ச்12

தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் தெல்லிப்பழை யூனியன்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் தெல்லிப்பழை யூனியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகிய முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் போட்டியாக விளையாடிய போதிலும் இரண்டாம் பாதி ஆட்டத்தில் யூனியன்ஸ் விளையாட்டுக் கழகம் தனது ஆதிக்கத்தில் ஆட்டத்தை வைத்திருந்தது.

போட்டி முடிவில் யூனியன்ஸ் விளையாட்டுக் கழகம் 16:05 புள்ளிகள் என்ற அடிப்படையில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழக அணியை வெற்றி கொண்டு தெல்லிப்பழை பிரதேச செயலக வலைப்பந்தாட்ட சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

3ஆம் இடத்தைப் பன்னாலை கணேசன் விளையாட்டுக் கழகம் பெற்றுக்கொண்டது. (1-86)

# தெல்லிப்பழை கோட்ட மென்பந்தாட்டம்; மகாஜன வெற்றிபெற்று சம்பியனானது

வலி வடக்கு,மார்ச்12

தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 15 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மகாஜனக் கல்லூரி வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்படுத்தாடிய மகாஜனக் கல்லூரி 15 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 113 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

மகாஜனக் கல்லூரி சார்பில் பார்த்தீபன், டிலக்சன், ஜவாகர் ஆகியோர் முறையே 35, 26, 24 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

அருணோதயாக் கல்லூரி சார்பில் பந்து வீசிய ஆபிரகரன் 2 விக்கெட்டையும் மற்றும் டினேஸ், கட்சன், ஜீவிதராஜ் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்படுத்தாடிய அருணோதயாக் கல்லூரி 12.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 67 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

அருணோதயாக் கல்லூரி சார்பில் பார்த்தீபன், ஜீவிதராஜ் ஆகியோர் முறையே 18, 17 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

மகாஜனக் கல்லூரி சார்பில் பந்து வீசிய பார்த்தீபன் 4 விக்கெட்டுகளையும் விஷ்ணுகாந், நிசாந், ஜவாகர், கபில்தேவ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர். 3ஆம் இடத்திற்கான போட்டியில் மல்லாகம் மகா வித்தியாலயமும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதிக்கொண்டன.

15 ஓவர்களில் மல்லாகம் மகாவித்தியாலயம் 6 விக்கெட்டுகளை இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பதிலுக்கு துடுப்படுத்தாடிய யூனியன் கல்லூரி 5 விக்கெட்டுகளை இழந்து 73 ஓட்டங்களைப் பெற்று 3ஆம் இடத்தையும் தனதாக்கிக் கொண்டது. (1-86)

# வடமராட்சிப் பாடசாலைகளுக்கு இடையிலான பெரு விளையாட்டுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்12

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுகளின் முடிவுகளை வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் வி.வல்லிபுரம் வெளியிட்டுள்ளார்.

முடிவுகளின் விவரம் வருமாறு:

**மேசைப்பந்தாட்டம்**

* *19 வயது ஆண்கள்* - நெல்லியடி ம.ம.வி. (சம்பியன்), விக்னேஸ்வராக் கல்லூரி.
* *19 வயதுப் பெண்கள்* - நெல்லியடி ம.ம.வி. (சம்பியன்), விக்னேஸ்வராக் கல்லூரி.

**பற்மின்ரன்**

* *19 வயது ஆண்கள்* - நெல்லியடி ம.ம.வி. (சம்பியன்), விக்னேஸ்வராக் கல்லூரி, தும்பளை சிவப்பிரகாச ம.வி.
* *19 வயது பெண்கள்* - மெதடிஸ்த பெ.உ.பா. (சம்பியன்), உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வட.இந்து மகளிர் கல்லூரி.

**கிரிக்கெட்**

* *19 வயது ஆண்கள்* - நெல்லியடி ம.ம.வி. (சம்பியன்), தேவரையாளி இ.கல்லூரி, இமையாணன் அ.த.க.பா.

**வலைபந்தாட்டம்**

* *15 வயது* - மெதடிஸ்த பெ.உ.பா. (சம்பியன்), வட.இந்து மகளிர், வட.மத்திய மகளிர்.
* *17 வயது* - மெதடிஸ்த பெ.உ.பா (சம்பியன்), வட.இந்து மகளிர், விக்னேஸ்வராக் கல்லூரி.
* *19 வயது* - வட.இந்து மகளிர் கல்லூரி (சம்பியன்), மெதடிஸ்த பெ.உ.பா., உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**சதுரங்கம்**

* *15 வயது ஆண்கள்* - ஹாட்லிக் கல்லூரி (சம்பியன்), நெல்லியடி ம.ம.வி., உடுப்பிட்டி அ.மி.க.
* *19 வயது ஆண்கள்* - ஹாட்லிக் கல்லூரி (சம்பியன்), நெல்லியடி ம.ம.வி., கரணவாய் ம.வி.
* *15 வயதுப் பெண்கள்* - நெல்லியடி ம.ம.வி. (சம்பியன்), வட.இந்து மகளிர், ஞான சாரியார் கல்லூரி.
* *19 வயதுப் பெண்கள்* - நெல்லியடி ம.ம.வி. (சம்பியன்), மெதடிஸ்த பெண்கள் உ.பா., வட.இந்து மகளிர். (1)

# சண்டிலிப்பாய் கோட்ட பெரு விளையாட்டு பண்டத்தரிப்பு மகளிர் இரு போட்டிகளில் முதலிடம்

யாழ்ப்பாணம்,மார்ச்12

சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற கரபந்தாட்டம் மற்றும் வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் இரு பிரிவுகளில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை முதலாம் இடங்களைப் பெற்றுள்ளது.

பெண்களுக்கான கரபந்தாட்டப் போட்டிகளில் 19 வயதுப் பிரிவில் முதலாம் இடத்தையும் 15 மற்றும் 17 வயதுப் பிரிவுகளில் இரண்டாம் இடங்களையும் அந்தப் பாடசாலை பெற்றுள்ளது.

வலைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் 17 வயதுப் பிரிவில் முதலாம் இடத்தையும் 19 வயதுப் பிரிவில் இரண்டாம் இடத்தையும் 15 வயதுப் பிரிவில் மூன்றாம் இடத்தையும் அந்தப் பாடசாலை பெற்றுக் கொண்டது. (1-202)

**குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்**

# சென்.அன்ரனிஸ் கல்லூரி மென்பந்தாட்டத்தில் வெற்றி

ஊர்காவற்றுறைக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற மென்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி சம்பியனானது.

போட்டியில் கலாநிதி ஆ.தியாகராசா ம.வி. இரண்டாம் இடத்தையும் யாழ்ற்ரன் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றன. (1)



உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே பெண்களுக்கான கரபந்தாட்ட இறுதிப்போட்டி மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. போட்டி இடம்பெறும் ஒரு காட்சியையும் போட்டியில் கலந்துகொண்ட இரு கழகங்களினதும் வீராங்கனைகளையும் படங்களில் காணலாம். *(படங்கள்: நேசன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சேவையிலிருந்து ஒய்வுபெற்ற மற்றும் 25 வருட சேவையைப் பூர்த்தி செய்த பல்கலைக்கழக ஊழியர் சங்க அங்கத்தவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு

## இன்று (12.03.2008) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணி

கடந்த ஆண்டுகளில் பல்கலைக்கழக சேவையிலிருந்து ஓய்வுபெற்ற 19 பல்கலைக்கழக ஊழியர் சங்க அங்கத்தவர்களுக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கம் விருது வழங்கிக் கௌரவிக்கிறது. அத்துடன் 25 வருட சேவையினைப் பூர்த்தி செய்துள்ள 42 ஊழியர்கள் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்வு இன்று (12.03.2008) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் திரு.க.நாகஜெயகுமாரன் தலைமையில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

இந்நிகழ்வில் துணைவேந்தர் பிரதம விருந்தினராகவும், பீடாதிபதிகள் சிறப்பு விருந்தினர்களாகவும், பதிவாளர் மற்றும் துறைத்தலைவர்கள் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**பல்கலைக்கழக ஊழியர் சங்கம், யாழ்.பல்கலைக்கழகம்.**

## துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி



பல்கலைக்கழகம் ஒன்றின் வெற்றியென்பது அந்த பல்கலைக்கழக சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களினதும் அர்ப்பணிப்பான சேவையின் வழியானது. கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக எங்கள் பண்பாட்டில் செழுங்கலை நியமமாய் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கண்ட சாதனைகளில் பங்காளிகளான அனைவரும் போற்றுதற்குரியவர்கள்.

இந்த வகையில் நிறைவான பணியில் ஓய்வுபெற்ற தம் தோழர்களையும், வெள்ளிவிழாக்கண்ட தோழர்களையும் விழா எடுத்துக் கௌரவிக்கும் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினரை உளமாரப் பாராட்டுகின்றோம்.

இந்த வைபவம், பாராட்டு பெறும் ஊழியர்களுக்கு தாங்கள் வாழ்ந்த வாழ்வு பற்றிய நிறைவினையும் அர்த்தத்தினையும் வழங்கும். ஏனையோருக்கு அவர்களுக்கான செல்நெறியை உணர்த்தி நிற்கும். பாராட்டுப்பெறும் அனைவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் நல்லனவெல்லாம் வசமாக என் அன்பு வாழ்த்துகள்.

துணைவேந்தர் அலுவலகம், யாழ்.பல்கலைக்கழகம். — பேராசிரியர் என்.சண்முகலிங்கன், துணைவேந்தர்.

## பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவரின் வாழ்த்துச் செய்தி



இன்றைய நாள் ஒய்வுபெற்ற மற்றும் பல்கலைக்கழக சேவையில் இருபத்தைந்து வருடங்களைப் பூர்த்தி செய்த எமது சகோதரர்கள் கௌரவிக்கப்படுகின்ற நன்னாள்.

காலங்காலமாக எமது சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் இந்நிகழ்வு நீண்ட இடைவெளியின் பின்னர் இன்று நிகழ்த்தப்படுவது எமக்கு பெரும் மனமகிழ்வை ஏற்படுத்துகின்றது.

இந்நிகழ்வில் கௌரவிக்கப்படும் நீங்கள் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய பசுமையான காலத்தில் பல பதவி உயர்வுகளைப் பெற்றீர்கள். நீங்கள் பல்கலைக்கழக சேவையில் இருந்துதான் ஓய்வுபெற்றிருக்கிறீர்கள். இனிவரும் காலம் ஓய்வின்றி உற்சாகமாக உழைக்க வேண்டியகாலம். குடும்ப உறவை வளர்த்து, பலப்படுத்தி சமூக, சமய நற்பணிகள் செய்து பூரண மனிதராக பல்லாண்டு காலம் மகிழ்வுடன் வாழவும், பல்கலைக்கழக சேவையில் வெள்ளிவிழாக் கண்டவர்கள் தொடர்ந்தும் பல்கலைக்கழகத்திற்கு நற்சேவையாற்றவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பல்கலைக்கழக ஊழியர் சங்கம், யாழ்.பல்கலைக்கழகம். — திரு.க.நாகஜெயகுமாரன், தலைவர்.

## கௌரவம் பெறும் ஓய்வுபெற்ற சங்க அங்கத்தவர்கள்

### சித்தமருத்துவம்



**திருமதி கண்ணகாதேவி உருத்திரசுந்தரம்**

திருமதி கண்ணகாதேவி உருத்திரசுந்தரம் அவர்கள் 25 வருடங்களுக்கு மேல் சிறப்பான சேவையாற்றி 02.03.2006 இல் சிரேஷ்ட பதவி நிலை உத்தியோகத்தர்/ எழுதுநர்சேவை பதவியிலிருந்து தமது 60ஆவது வயதில் ஒய்வு பெற்றார்.

### மருத்துவபீடம்



**திரு.மாணிக்கம் ஜெகராசா**

திரு.மாணிக்கம் ஜெகராசா அவர்கள் 25 வருடங்களுக்கு மேல் சிறப்பான சேவையாற்றி 12.04.2006 இல் ஆய்வுகூட உதவியாளர், அதிவிசேடதரம் பதவியிலிருந்து 60ஆவது வயதில் ஒய்வுபெற்றார்.

### விஞ்ஞானபீடம்



**திரு சதாசிவம் நரேந்திரன்**

திரு சதாசிவம் நரேந்திரன் அவர்கள் 36 வருடங்களுக்கு மேல் சிறப்பான சேவையாற்றி 05.06.2006 இல் சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியிலிருந்து தமது 60ஆவது வயதில் ஒய்வ பெற்றார்.

### மருத்துவபீடம்



**திரு வல்லிபுரம் சந்திரன்**

வல்லிபுரம் சந்திரன் அவர்கள் 28 வருடங்களுக்கு மேல் சிறப்பான சேவையாற்றி 10.11.2006 இல் ஒப்பந்த தோட்டத்தொழிலாளி பதவியிலிருந்து ஓய்வுபெற்றார்.

### பராமரிப்புப் பகுதி



**திரு கந்தையா நடராசா**

திரு கந்தையா நடராசா அவர்கள் 32 வருடங்களுக்கு மேல் சேவையாற்றி 17.04.2007 இல் மேசன், அதிவிசேடதரம் பதவியிலிருந்து தமது 60ஆவது வயதில் ஒய்வு பெற்றார்.

### பராமரிப்புப் பகுதி



**திரு வேலுப்பிள்ளை கைலாயநாதன்**

திரு வேலுப்பிள்ளை கைலாயநாதன் அவர்கள் 30 வருடங்களுக்கு மேல் சிறப்பான சேவையாற்றி 21.02.2006 இல் நீர் இயந்திரப்பம்பி இயக்குநர் தரம் I பதவியிலிருந்து தமது 60ஆவது வயதில் ஓய்வுபெற்றார்.

### பராமரிப்புப் பகுதி



**திரு முருகேசு இராசரத்தினம்**

திரு முருகேசு இராசரத்தினம் அவர்கள் 29 வருடங்களுக்கு மேல் சிறப்பான சேவையாற்றி 05.09.2005இல் மேசன் விசேடதரம் பதவியிலிருந்து தமது 60ஆவது வயதில் ஒய்வுபெற்றார்.

### பாதுகாப்புத் திணைக்களம்



**திரு சம்பந்தபிள்ளை சிதம்பரநடராசா**

திரு சம்பந்தபிள்ளை சிதம்பரநடராசா அவர்கள் 30 வருடங்களுக்கு மேல் சிறப்பான சேவையாற்றி 05.07.2006 இல் பாதுகாப்பு சேவகர், அதிவிசேட தரம் பதவியிலிருந்து தமது 60ஆவது வயதில் ஒய்வுபெற்றார்.

### நூலகம்



**திரு கைலாயபிள்ளை தர்மகுலசிங்கம்**

திரு கைலாயபிள்ளை தர்மகுலசிங்கம் அவர்கள் 19 வருடங்களுக்கு மேல் சிறப்பான சேவை யாற்றி 05.12.2007 இல் நூலக கவனிப்பாளர், விசேடதரம் பதவியிலிருந்து தமது 60ஆவது வயதில் ஒய்வ பெற்றார்.

### நிர்வாகக்கிளை



**திரு குட்டித்தம்பி பாலசுப்பிரமணியம்**

திரு குட்டித்தம்பி பாலசுப்பிரமணியம் அவர்கள் 30வருடங்களுக்கு மேல் சிறப்பான சேவையாற்றி 27.12.2006இல் துவிச்சக்கர வண்டி ஏவலாளர், விசேடதரம் பதவியிலிருந்து தமது 60ஆவது வயதில் ஒய்வு பெற்றார். இவர் பல்கலைக்கழகத்தின் ஒய்வூதியத் திட்டத்தில் இணைந்து ஓர் ஒய்வூதியராக உள்ளார்.

### நூலகம்



**திரு தெட்சணாமூர்த்தி சிவபாதம்**

திரு தெட்சணாமூர்த்தி சிவபாதம் அவர்கள் 25 வருடங்களுக்கு மேல் சிறப்பான சேவையாற்றி 06.08.2007 இல் சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர்/ நூலகசேவைகள் பதவியிலிருந்து தமது 60ஆவது வயதில் ஒய்வுபெற்றார்.

### நிதிக்கிளை



**திரு இராமலிங்கம் ஜெயானந்தன்**

திரு இராமலிங்கம் ஜெயானந்தன் அவர்கள் 19 வருடங்களுக்கு மேல் சிறப்பான சேவையாற்றி 01.03.2005 இல் கொள்வனவு உத்தியோகத்தர் தரம் I பதவியிலிருந்து தமது 60ஆவது வயதில் ஒய்வு பெற்றார்.

### சுகாதாரப்பகுதி



**திரு தூசை அந்தோனி**

திரு தூசை அந்தோனி அவர்கள் 29 வருடங்களுக்கு மேல் சிறப்பான சேவையாற்றி 10.04.2005 சுகாதார சேவைகள் தொழிலாளி, அதிவிசேட தரம் பதவியிலிருந்து தமது 60ஆவது வயதில் ஒய்வ பெற்றார்.

### பாதுகாப்புத் திணைக்களம்



**திரு விசுவப்பு சிவலிங்கம்**

திரு விசுவப்பு சிவலிங்கம் அவர்கள் 28 வருடங்களுக்கு மேல் சிறப்பான சேவையாற்றி 08.04.2007 இல் பாதுகாப்புச் சேவகர், அதிவிசேடதரம் பதவியிலிருந்து ஒய்வுபெற்றார்.

### விஞ்ஞானபீடம்



**திரு சின்னப்பு சிறிஸ்கந்தராஜன்**

திரு சின்னப்பு சிறிஸ்கந்தராஜன் அவர்கள் 26 வருடங்களுக்கு மேல் சிறப்பான சேவையாற்றி 09.02.2007 தொழிலாளி விசேடதரம் பதவியிலிருந்து ஒய்வுபெற்றார்.

### நூலகம்



**திரு தர்மலிங்கம் அருள்ராஜா**

திரு தர்மலிங்கம் அருள்ராஜா அவர்கள் 27 வருடங்களுக்கு மேல் சிறப்பான சேவையாற்றி 26.09.2007இல் புத்தகம் கட்டுநர், விசேடதரம் பதவியிலிருந்து ஒய்வுபெற்றார்.

### பராமரிப்புப் பகுதி



**திரு. யோசப் அன்ரன் பாலராஜ்**

திரு யோசப் அன்ரன் பாலராஜ் அவர்கள் 24 வருடங்களுக்கு மேல் சிறப்பான சேவையாற்றி 29.02.2008 இல் வர்ணம் தீட்டுநர், விசேடதரம் பதவியிலிருந்து தமது 60ஆவது வயதில் ஒய்வுபெற்றார்.

### விஞ்ஞானபீடம்



**செல்வி சரோஜினிதேவி சபாரத்தினம்**

செல்வி சரோஜினிதேவி சபாரத்தினம் அவர்கள் 27 வருடங்களுக்கு மேல் சிறப்பான சேவையாற்றி 17.01.2008 இல் சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர்/ எழுதுநர்சேவை பதவியிலிருந்து ஒய்வுபெற்றார்.

### நூலகம்



**திரு செபமாலை யோசப் மரியநாயகம்**

திரு செபமாலை யோசப் மரியநாயகம் அவர்கள் 27 வருடங்களுக்கு மேல் சிறப்பான சேவையாற்றி 04.02.2008 இல் சிரேஷ்ட பதவி நிலை உத்தியோகத்தர்/ நூலகசேவை பதவியிலிருந்து தமது 60 ஆவது வயதில் ஒய்வுபெற்றார்.

## 25 வருட சேவையினைப் பூர்த்தி செய்து கௌரவம் பெறுபவர்கள்

01. திரு.எஸ்.ரவீந்திரநாதன்
02. திரு.ரி.செல்வநாயகம்
03. திரு.என்.இராஜரட்ணம்
04. திரு.எம்.சிவபாலன்
05. திரு.வி.தர்மகுலசிங்கம்
06. திரு.எச்.எச்.ஜோன்
07. திரு.ப.யோகேஸ்வரன்
08. திரு.ந.கனேசலிங்கம்

**நிர்வாகக்கிளை**

09. வி.சிவசுப்பிரமணியம் [தாபனக்கிளை]
10. திரு.ஐ.நாகராஜா [பதிவாளர் அலுவலகம்]
11. திரு.எஸ்.வி.அன்ரனி [நிதிக்கிளை]
12. திரு. எஸ்.யோகேஸ்வரன் [நிர்வாகக்கிளை]
13. திரு.என்.சிவசுப்பிரமணியம் [கல்விக்கிளை]
14. திருமதி ம.ரங்கசுவாமி [தொழில் வழிகாட்டுநர் அலுவலகம்]
15. திரு.க.தங்கராஜா [நிர்வாகக்கிளை]

**கலைப்பீடம்**

16. செல்வி ப.விஜயரட்ணம் [ELTC]
17. திருமதி வை.நாகஜெயகுமாரன் [வரலாற்றுத்துறை]

**பராமரிப்புப்பகுதி**

18. திரு.சி.க.தனேந்திரன்
19. திரு.எஸ்.முருகையா
20. திரு.எஸ்.பாலசிங்கம்

**சித்தமருத்துவம்**

21. திரு.கே.வேலானந்தன்

**சுகாதாரசேவைகள்**

22. திரு.வி.கந்தையா
23. திரு.என்.மோகனேஸ்வரன்
24. திரு.எஸ்.முத்துலிங்கம்
25. திரு.எஸ்.துரைரட்ணம்
26. திரு.கே.ஞானேந்திரன்

**மருத்துவபீடம்**

27. திருமதி எம்.சபாநாதர் [சமுதாய மருத்துவம்]
28. திரு.எம்.செந்தில்குமரன் [நோயியல்துறை]
29. திரு.கே.கந்தசாமி [நோயியல்துறை]
30. திரு.எஸ்.பரனிதரன் [உயிர் இரசாயனவியல்துறை]
31. திரு.ஐ.இராஜரட்ணம் [உடற்றொழிலியல்துறை]
32. திரு.எம்.குமாரசிங்கம் [மாதர் நோயியல் மகப்பேற்றுத்துறை]
33. திரு.எஸ்.நரநாராயணமூர்த்தி [சத்திரசிகிச்சைத்துறை]
34. திரு.எஸ்.திவ்வியரட்ணம் [சட்டமருத்துவத்துறை]

**விஞ்ஞானபீடம்**

35. திரு.என்.செல்வசிங்கம் [இரசாயனவியல்துறை]
36. திரு.ஐ.நவரட்ணராஜா [இரசாயனவியல்துறை]
37. திரு.எஸ்.சந்திரசேகரம் [இரசாயனவியல்துறை]
38. திரு.பி.விமலானந்தன் [விலங்கியல்துறை]
39. திரு.கே.கிருஷ்ணசாமி [தாவரவியல்துறை]
40. திரு.எம்.குழந்தைவேல் [கணனிப்பிரிவு]
41. திரு.வி.செல்வகுமார [பௌதிகவியல்துறை]

**விவசாயபீடம்**

42. திரு.அ.ஆறுமுகம்

## நிகழ்ச்சி நிரல்

★ மங்கள விளக்கேற்றல்

★ இறைவணக்கம்
திரு.க.தங்கராஜா ([illegible])
திரு.அ.சந்தியா ([illegible])

★ வரவேற்புரை
திரு.சு.மணிவண்ணன் ([illegible])

★ தலைமையுரை
திரு.க.நாகஜெயக்குமாரன் (தலைவர், பல்கலைக்கழக ஊழியர் சங்கம்)

★ பிரதம விருந்தினர்
பேராசியர் நா.சண்முகலிங்கன் (துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

★ சிறப்பு விருந்தினர்கள்
பீடாதிபதிகள்

★ கௌரவ விருந்தினர்கள்
திரு.த.அன்பானந்தன் ([illegible])
திரு.யோ.ஜெயக்குமார் ([illegible])

★ விழா நாயகர்களைக் கௌரவித்தல்

★ ஏற்புரை

★ நன்றியுரை
திரு.செ.செல்வரட்ணம் ([illegible])

[71885]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# புதுடில்லியின் இரட்டை வேடம்

ஒரு குற்றத்துக்கு வழங்கப்படும் அதே தண்டனையே அந்தக் குற்றத்தை இழைப்பதற்கு உடந்தையாக இருந்து உதவி புரியும் தவறுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதே பொதுவான தண்டனைச் சட்டக் கோவை ஏற்பாடாகும்.

இந்த அடிப்படையில்தான், இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு எதிராக சிங்கள அரசு இழைக்கும் இன அழிப்புக் குற்றத்துக்கு, அதற்கு உடந்தையாகி, உதவி புரியும் இந்திய அரசும் பொறுப்பேற்க வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இப்போது சுட்டிக் காட்டியிருக்கின்றது.

ஈழத் தமிழர் விவகாரத்தில் காங்கிரஸ் கட்சி தலைமையிலான புதுடில்லி அரசு 1980 களின் பிற்பகுதியில் இழைத்த வரலாற்றுத் தவறைத் தமது கடந்த வருட மாவீரர் தின உரையிலும் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் சுட்டிக்காட்டியிருந்தார்.

அன்று, தனது தெற்கு நோக்கிய வல்லாதிக்க விரிவாக்கமாக ஈழத் தமிழரின் தேசியப் பிரச்சினையில் தமிழர்களது சம்மதமோ, ஒப்புதலோ இன்றி, சிங்கள அரசுடன் கூட்டுச் சேர்ந்து தலையிட்டு, இராணுவ ரீதியில் தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து, தான் தீர்வு என்று கருதிய அரைவேக்காட்டுத்திட்டம் ஒன்றைத் தமிழர் மீது பலவந்தமாகத் திணிக்கும் முயற்சி மூலம் இந்தியா வரலாற்றுத் தவறு இழைத்திருப்பதை கடந்த மாவீரர்தின உரையிலும் தலைவர் பிரபாகரன் சுட்டிக்காட்டியிருந்தார்.

மீண்டும் புதுடில்லி காங்கிரஸ் அரசு இழைக்கும் வரலாற்றுத் தவறை விடுதலைப் புலிகள் இப்போதும் சுட்டிக்காட்டுகின்றனர்.

அப்போது போட்ட இரட்டை வேடத்தையே இப்போது மீண்டும் புதுடில்லி போட முனைகின்றமையையும் புலிகள் அம்பலப்படுத்தியிருக்கின்றனர்.

அன்று தனது புவியியல் - கேந்திர நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கில் இந்திய அரசு ஈழத் தமிழரின் தேசிய சுதந்திரப் போராட்டத்தைத் தவறாகக் கையாண்டது.

ஒடுக்கப்பட்ட ஒரு மக்கள் இனத்தின் உணர் வலைகளை - தியாகச் சுடர்விடும் அந்த மக்கள் இனத்தின் சுதந்திர வேட்கையை - இந்தியா அலட்சியம் செய்து, உதாசீனப்படுத்தி, புறமொதுக்கி நடந்து கொண்டது. தமிழ் மக்களுக்கு நீதியும், நியாயமும் வழங்கும் தார்மீகக் கடப்பாட்டுப் பொறுப்பிலிருந்து அது வழுவியது. மாறாக, உலகத்தின் மனச்சாட்சியை உறுத்திய - உலுக்கிய - ஈழத்தமிழரின் அவலத்தை - இழிவு நிலையை - முதன்மைப்படுத்தி, பயன்படுத்தி, அதைக் காரணமாகவும் தனது நடவடிக்கைக்கான நியாயமாகவும் காட்டி இலங்கை விடயத்தில் எல்லை மீறித் தலையிட்டது புதுடில்லி. தனது மேலாதிக்க மேலாண்மையைத் திணித்து தனது சுயநோக்கை அது எட்ட முயன்றது.

அதேமாதிரியான வரலாற்றுத் தவறைப் புதுடில்லி மீண்டும் அரங்கேற்ற முயல்வதையே விடுதலைப் புலிகள் இப்போது திரும்பவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

''அரசியல், இராணுவ, பொருளாதார ரீதியில் தொய்ந்து போயுள்ள கொழும்பு அரசுக்கு முண்டு கொடுப்பதன் மூலம், கொழும்பு அரசு ஈழத் தமிழருக்கு எதிராகத் தொடுத்துள்ள இன அழிப்புப் போருக்கு இந்தியா துணை போகின்றது'' - என்ற உண்மையைப் புலிகளின் தலைமை வெளிவெளியாக - அப்பட்டமாக - சுட்டிக்காட்டியிருக்கின்றது.

ஒருபுறம் ''ஈழத் தமிழர் பிரச்சினைக்கு அமைதி வழியில் அரசியல் தீர்வே காணப்படமுடியும்'' - என்று அடித்துக் கூறிக்கொண்டே, மறுபுறம் தள்ளாடிப்போயிருக்கும் சிங்கள இராணுவ இயந்திரத்துக்கு முண்டு கொடுத்து, தமிழருக்கு எதிரான இன அழிப்புப் போருக்கு அதனை உசுப்பேற்றிவிடும் செயலையும் புரிவதன் மூலம் இப்போது மீண்டும் இரட்டைவேடம் போடுகிறது இந்திய அரசு என்பதைப் புலிகளின் பிந்திய அறிக்கை அம்பலப்படுத்துகின்றது.

ஈழத் தமிழர் அழிப்பு விவகாரத்தில் மூழ்கிக் கிடக்கும் கொழும்பு அரசுக்கு முண்டு கொடுப்பதன் மூலம் புதுடில்லி இரட்டை வேடம் போடுகின்றது என்றால் -

அதற்குப் பின்புலத்தில் அந்தப் புதுடில்லி அரசு நின்று நிலைப்பதற்கு அதற்கு முண்டு கொடுப்பதில் சம்பந்தப்படும் தமிழக அரசின் இரட்டை வேடமும் புதைந்து கிடக்கின்றது என்பதும் கவனிக்கத்தக்கது.

கொழும்பை அரவணைப்பதன் மூலம் இந்திய அரசு புரியும் இந்தத் தமிழின விரோதச் செயலை தமிழ் நாட்டு மக்கள் புரிந்து கொண்டு அதற்குத் தமது கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று ஈழத் தமிழ் மக்கள் சார்பில் தமிழக மக்களிடம் கோரிக்கை விடுப்பதாகப் புலிகள் அமைப்பு தெரிவித்திருக்கின்றது.

இவ்விவகாரத்தில் தமிழக அரசின் இரட்டை வேடம் பற்றிய குற்றச்சாட்டும்இந்தக் கோரிக்கையின் வரிகளுக்கு இடையில் - வெளியே அப்பட்டமாகத் தெரியாத வகையில் - புதைந்து கிடப்பதை வாசகர் அறிந்து புரிந்து கொள்ளமுடியும்.

தமிழகம் தன்னை நெறிப்படுத்தினால் புதுடில்லி அரசு சரிப்படும். புதுடில்லி அரசு ஒழுங்கானால் அது ஈழத் தமிழருக்கு நியாயம் கிடைக்க - விடிவு கிட்ட - வழியாகும்.

# ஒரேபார்வையில் கிழக்கு உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள்

### மட்டக்களப்பு மாநகரசபை

| கட்சி | வாக்குகள் | உறுப்பினர் |
|---|---|---|
| ஐ.ம.சு.மு. | 14,158 | 11 |
| சுயேச்சைக்குழு 1 | 9,601 | 6 |
| ஸ்ரீல.மு.கா. | 1,788 | 1 |
| ஈழவர் ஐ.மு. | 427 | 1 |
| ஜா.ச.பெ. | 291 | |
| சுயேச்சைக்குழு 3 | 43 | |
| சுயேச்சைக்குழு 2 | 23 | |
| செல்லுபடியானவை | 26,331 | |
| நிராகரிக்கப்பட்டவை | 2,822 | |
| அளிக்கப்பட்டவை | 29,153 | |
| பதிவு செய்யப்பட்டவை | 54,948 | |

### கோரளைப்பற்று வடக்குப் பிரதேச சபை

| கட்சி | வாக்குகள் | உறுப்பினர் |
|---|---|---|
| த.ம.வி.பு | 7,331 | 10 |
| பொ.ஐ.சு. மு. | 528 | 1 |
| சுயேச்சைக்குழு | 454 | |
| ஈழவர் ஐ.மு. | 351 | |
| ஜா.ச.பெ. | 52 | |
| செல்லுபடியானவை | 8,716 | |
| நிராகரிக்கப்பட்டவை | 1,165 | |
| அளிக்கப்பட்டவை | 9,881 | |
| பதிவுசெய்யப்பட்டவை | 12,419 | |

### போரதீவுப்பற்று பிரதேச சபை

| கட்சி | வாக்குகள் | உறுப்பினர் |
|---|---|---|
| த. ம.வி. புலிகள் | 7,089 | 7 |
| சுயேச்சைக் குழு | 3,051 | 2 |
| செல்லுபடியானவை | 10,140 | |
| நிராகரிக்கப்பட்டவை | 2,660 | |
| அளிக்கப்பட்டவை | 12,800 | |
| பதிவுசெய்யப்பட்டவை | 28,116 | |

### மண்முனை தெற்கு இருவில் பற்று பிரதேச சபை

| கட்சி | வாக்குகள் | உறுப்பினர் |
|---|---|---|
| த.ம.வி.புலிகள் | 10,047 | 7 |
| சுயேச்சைக் குழு | 5,615 | 3 |
| ஈழவர் ஐ.மு. | 193 | |
| ஜா.ச.பெ. | 193 | |
| செல்லுபடியானவை | 16,048 | |
| நிராகரிக்கப்பட்டவை | 2,454 | |
| அளிக்கப்பட்டவை | 18,502 | |
| பதிவுசெய்யப்பட்டவை | 38,386 | |

### மண்முனை தென்மேற்குப் பிரதேசசபை

| கட்சி | வாக்குகள் | உறுப்பினர் |
|---|---|---|
| த.ம.வி.புலிகள் | 6,371 | 8 |
| சுயேச்சைக் குழு | 1,401 | 1 |
| ஈழவர் ஐ.மு. | 88 | |
| செல்லுபடியானவை | 7,860 | |
| நிராகரிக்கப்பட்டவை | 1,852 | |
| அளிக்கப்பட்டவை | 9,712 | |
| பதிவுசெய்யப்பட்டவை | 14,880 | |

### மண்முனைப்பற்று பிரதேச சபை

| கட்சி | வாக்குகள் | உறுப்பினர் |
|---|---|---|
| த.ம.வி.புலிகள் | 9,373 | 7 |
| ஸ்ரீல.மு.கா | 2,816 | 2 |
| சுயேச்சைக்குழு 1 | 510 | |
| பொ.ஐ.சு.மு | 336 | |
| தே. கா | 70 | |
| ஈழவர். ஐ.மு. | 29 | |
| சுயேச்சைக்குழு 3 | 18 | |
| சுயேச்சைக்குழு 2 | 6 | |
| செல்லுபடியானவை | 13,158 | |
| நிராகரிக்கப்பட்டவை | 856 | |
| அளிக்கப்பட்டவை | 14,014 | |
| பதிவுசெய்யப்பட்டவை | 18,759 | |

### ஏறாவூர்பற்றுப் பிரதேச சபை

| கட்சி | வாக்குகள் | உறுப்பினர் |
|---|---|---|
| த.ம.வி.புலிகள் | 15,851 | 10 |
| ஸ்ரீல.மு.கா | 3,479 | 2 |
| சுயேச்சைக்குழு 1 | 2,485 | 1 |
| பொ.ஐ.சு.மு | 2,478 | 1 |
| சுயேச்சைக்குழு 5 | 281 | 0 |
| ஜா.ச.பெ. | 154 | 0 |
| ஈழவர் ஐ.மு. | 106 | 0 |
| சுயேச்சைக் குழு 2 | 31 | 0 |
| சுயேச்சைக்குழு 3 | 24 | 0 |
| சுயேச்சைக்குழு 4 | 15 | 0 |
| செல்லுபடியானவை | 24,904 | |
| நிராகரிக்கப்பட்டவை | 3,245 | |
| அளிக்கப்பட்டவை | 28,149 | |
| பதிவு செய்யப்பட்டவை | 45,336 | |

### கோரளைப்பற்றுப் பிரதேசசபை

| கட்சி | வாக்குகள் | உறுப்பினர் |
|---|---|---|
| த.ம.வி.புலிகள் | 12,299 | 6 |
| ஸ்ரீல.மு.கா. | 5,218 | 2 |
| பொ.ஐ.சு.மு. | 4,249 | 2 |
| சுயேச்சைக்குழு 1 | 2,820 | 1 |
| சுயேச்சைக்குழு 3 | 948 | |
| சுயேச்சைக்குழு 2 | 213 | |
| ஈழவர் ஐ.மு. | 125 | |
| சுயேச்சைக்குழு 5 | 35 | |
| சுயேச்சைக்குழு 4 | 27 | |
| செல்லுபடியானவை | 25,934 | |
| நிராகரிக்கப்பட்டவை | 2,922 | |
| அளிக்கப்பட்டவை | 28,856 | |
| பதிவு செய்யப்பட்டவை | 41,856 | |

### மண்முனை மேற்கு பிரதேசசபை

| கட்சி | வாக்குகள் | உறுப்பினர் |
|---|---|---|
| த.ம.வி.புலிகள் | 4,644 | 6 |
| சுயேச்சைக்குழு 1 | 3,981 | 3 |
| சுயேச்சைக்குழு 2 | 163 | 0 |
| ஈழவர் ஐ.மு. | 98 | 0 |
| செல்லுபடியானவை | 8,886 | |
| நிராகரிக்கப்பட்டவை | 1,796 | |
| அளிக்கப்பட்டவை | 10,682 | |
| பதிவு செய்யப்பட்டவை | 15,771 | |

### தேசிய சம்பள நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக

# ஆசிரியர் தொழிற்சங்கங்களின் பதில் கருத்து இம்மாதம் 19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படுகிறது

அச்சுவேலி, மார்ச் 12

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பாகத் தேசிய சம்பள நிர்ணய ஆணைக்குழு சமர்ப்பித்துள்ள அறிக்கைக்கான தமது பதில் கருத்துக்களை ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தாம் தனித்தனியாகச் சமர்ப்பிக்காமல் 13 இற்கு மேற்பட்ட ஆசிரியர் தொழிற்சங்கஙளும்ஒன்றாகஇணைந்து அதிபர், ஆசிரியர் ஒன்றியம் என்ற வகையில் சமர்ப்பிக்கவுள்ளன.

எதிர்வரும் 19 ஆம் திகதி தமது அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகளை அதிபர், ஆசிரியர் ஒன்றியம் மேற்கொண்டு வருகின்றது.

மார்ச் 3 ஆம் திகதி ஜனாதிபதியுடன் இடம்பெற்ற சந்திப்பில் ஆசிரியர் தொழிற்சங்கங்களிடம் தேசிய சம்பள நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை கையளிக்கப்பட்டு ஒரு வாரத்தில் அறிக்கை தொடர்பான பதில் கருத்துக்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டிருந்தது.

தேசிய சம்பள நிர்ணய ஆணைக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை ஆசிரியர் தொழிற்சங்கங்கள் ஒட்டுமொத்தமாக எதிர்ப்பதால் ஆசிரியர் தொழிற்சங்கங்களின் ஒருமித்த கருத்தாக அதிபர், ஆசிரியர் ஒன்றியம் என்ற வகையில் தமது கருத்தை வெளிப் படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(50-11)

# ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது

அச்சுவேலி, மார்ச் 12

ஆசிரியர்தேசியஇடமாற்றக்கொள்கை தொடர்பான சுற்றிக்கையைக் கல்வியமைச்சு வெளியட்டுள்ளது. ஆசிரியர் இடமாற்றங்களை தேசிய ரீதியில் ஒரே விதமாகப் பின்பற்றுவதற்கு ஏதுவாக இந்தப் புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

ஆசிரியர்களை இடமாற்றம் செய்யும்போது ஆசிரியர் இடமாற்றச் சபைகளின் அனுமதி இன்றி இடமாற்றம் செய்யமுடியாது எனவும் அவசிய தேவையை கருத்தில்கொண்டு இடமாற்றம் செய்யும்போது அதற்குப் பொறுப்பான கல்விப்பணிப்பாளர் இரண்டு வாரங்களுக்குள் இடமாற்றச் சபைக்கு அது தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறவேண்டும் எனவும் அதில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர் தனது இடமாற்றம் தொடர்பாக மேன்முறையீடு செய்யும் இடத்து மேன்முறையீட்டின் தீர்ப்பு கிடைக்கும் வரை தொடர்ந்து அதே பாடசாலையில் கடமையாற்ற முடியும் எனவும் இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியரால் செய்யப்பட்ட மேன்முறையீடு பொருத்தமான முறையில் பரிசீலனை செய்யப்பட்டு அது தொடர்பான இறுதி முடிவு சம்பந்தப்பட்ட ஆசிரியருக்கு எழுத்துமூலம் தெரிவிக்கப்படவேண்டும் எனவும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2007/20 இலக்க கல்வி அமைச்சின் இந்தச் சுற்றறிக்கை சகல மட்டங்களிலும் உள்ள கல்வி அதிகாரிகளுக்கும் அதிபர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(50-11)

## நாளை

| | |
|---|---|
| மாசி - 30 | 13.03.2008 |
| | வியாழக்கிழமை |
| திதி: சஷ்டி | மு.ப. 11.17 வரை |
| நட்சத்திரம் : | கார்த்திகை |
| மு.ப. 09.27 வரை | |
| சுபநேரம் : | 07.51 - 09.21 |
| ராகுகாலம் : | 01.51 - 03.21 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பாத பூஜை

ஸ்ரீ அம்மா பகவானின் பாத பூஜை நாளை (13.03.2008) வியாழக்கிழமை 3.30மணிக்கு சுன்னாகம் புகையிரத நிலையம் முன்பாக செக்கர் கந்தசாமி வீதியில் பத்மநாதன் இல்லத்தில் நடைபெறும். வாரத்தில் வரும் சனிக்கிழமை களில் நான்கு மணிக்குப் பஜனையும் இடம்பெறும்.

- ஸ்ரீ அம்மா பகவான் அன்பர்கள்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 02 ★ 12 ★ 1939



ஆண்டவன் அடியில் 05 ★ 03 ★ 2006

**அமரர் செல்லையா சபாரத்தினம்**

(இளைப்பாறிய பதவிநிலை உத்தியோகத்தர், கமநல அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்.)

அன்பினைத் தளமாக்கி அறிவினை வளமாக்கி
பண்பினை பாசமாக்கி தருமத்தை நெறியாக்கி
வாழ்ந்து காட்டியவரே! மறைந்தது - ஆண்டு இரண்டு
மறையாதது - பசுமை நினைவு!

'கமலை'
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். (68573)

ஆறாத்துயரில்:
குடும்பத்தினர்.

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்

அகம் மகிழ 25 . 07 . 1934



அகம் நெகிழ 10 . 03 . 2000

**அமரர் சிவக்கொழுந்து சீனிவாசகம்**

திதி: பஞ்சமி (12.03.2008)

ஆண்டெட்டு ஓடி மறைந்தது அப்பா - எனினும்
ஆறிடுமோ ஆழ்துயர் எம்மினின்றும்
உயிரினில் எம் உணர்வு நிறைந்த எங்கள் ஆசை அப்பா!
உண்மையில் நீங்கள் மறையவில்லை - மாண்புடன்
என்றும் எம்மில் வாழ்கின்றீர்கள்!

பிரிவால் துயருறும்:

62, புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு,
கல்வியங்காடு. (71892)

அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை - வெற்றிடங்கள்
## கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்

- ★ தகைமைகள்: க.பொ.த. (சா/த) சித்தி.
- ★ வயது: 20 தொடக்கம் 50 வரை
- ★ உயரம்: 5' 4''
- ★ குறிப்பு : a) இளைப்பாறிய பொலிஸ்/ படை உத்தியோகத்தர்கள், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர், சாரணர்கள், விளையாட்டுத்துறை வீரர்களுக்கு முன்னுரிமை.
  b) நல்ல கண் பார்வையும் தேகாரோக்கியமும் இருத்தல் வேண்டும்.
- ★ சம்பளம் : வருகை ஊக்குவிப்புப் பணம், விஷேட சலுகைகள், மாதமொன்றுக்கு ரூபா 9000/= இற்குக் குறையாத சம்பளம். EPF, ETF, Insurance உட்பட வழங்கப்படும்.

நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 15.03.2008 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கீழ்குறிப் பிடப்பட்ட முகவரியில் நடைபெறும். பின்வரும் ஆவணங்களுடன் சமுகம் கொடுக்கவும்.

1) கிராம உத்தியோகத்தரின் நற்சான்றுப் பத்திரம் (6 மாதத்திற்குட்பட்டது)
2) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.
3) தேசிய அடையாள அட்டை, விசேட அடையாளஅட்டை.
4) கல்விச் சான்றிதழ்கள் மற்றும் பிற சான்றிதழ்கள். அனைத்தினதும் மூலப் பிரதியுடன் போட்டோப் பிரதியும் கொண்டுவரவும்.

முகவரி:
இல.337 1/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

- பணிப்பாளர்.

## ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு வாழ்வுச் சான்றிதழ் படிவம்

யாழ்ப்பாணம்,மார்ச் 12

ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு யாழ்.பிரதேச செயலகத்தால் வாழ்வுச் சான்றிதழ் படிவங்கள் ஓய்வூதியப் பற்றுச்சீட்டுடன் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

இவற்றைப்பூரணப்படுத்தி ஏப்ரல்10ஆம் திகதிக்கு முன்னர் கிராம அலுவலரின் உறுதிப்படுத்தலுடன் பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப் பட்டுள்ளது.

பெயர், ஓய்வூதிய இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம், ஓய்வூதியம் பெறும் வங்கி, வங்கிக் கணக்கு இ லக்கம், தற்போதைய முகவரி, கிராம சே வயாளர் பிரிவு என்பன தெளிவாக படிவத்தில் எழுதப்பட வேண்டும் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(203-302)

## தவறிவிட்டது

கைதடி தெற்கைச் சேர்ந்த இந்திரபாலன் டயானா என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.848103470 V), விசேட அடையாள அட்டை (இல.091020119) என்பன கடந்த 8ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கிற்கும் யாழ்.போதனா வைத்திய சாலைக்குமிடையே தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கைதடி சந்தியிலுள்ள இளவரசி தையலகத்திலோ அல்லது 2222652 இலக்க தொலைபேசியூடாகவோ தொடர்பு கொண்டு ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## கண்ணீர் அஞ்சலி



அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கப் பணியாளர் திரு.வை.அஜந்தன் அவர்களின் அன்புத் தந்தை

**வேலுப்பிள்ளை வைத்திலிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்க ஊழியர் நலன்புரிச் சங்கம்.

(சி/551798)

## சிலுவையின் பாதையில் பயணிக்க...

ஏன் இந்த வாழ்வு? ஏன் இந்த துயரம் இறைவா? இன்று பலரும் கேட்கும் கேள்வி இது. ''துயருறுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்.''

''நானே வழியும், உண்மையும், உயிரும்'' என்று கூறிய கிறிஸ்து தாம் நடந்து சென்ற வாழ்க்கைப் பாதையை நாமும் காண வேண்டுமென்று விரும்புகின்றார். ''தினமும் உனது சிலுவையைச் சுமந்து கொண்டு என்னைப்பின்செல்'' என்று கூறி தமது உண்மையினால் நாம் ஒளிபெற வேண்டுமென விரும்புகின்றார். சிலுவையின் பாதையில் பயணிக்க எம்மை அழைக்கின்றார்.




அன்று சிலுவை ஓர் அவமானச்சின்னம். இன்று சிலருக்கு அது அடையாளச் சின்னம், இன்னும் சிலருக்கு அலங்காரச் சின்னம், வேறு சிலருக்கு அடைக்கலச் சின்னம், அப்படியானால் சிலுவை எனக்கு என்ன?

கிறிஸ்துவின் பாடுகள் மரணம், உயிர்ப்பு என்னும் மறை பொருளானது மானிட விடுதலைக்கான இறைத்திட்டத்தின் மறைபொருளாக இருக்கின்றது. கிறிஸ்து தீமையைத் தீமையால் எதிர்க்கவில்லை. மாறாக அதன் துன்பத்தைத் தாங்கி கொள்கின்றார். அனுபவிக்கின்றார். புதிய வாழ்வால் நிரப்பப்பெற்று, சகல அநீதிகளையும் தீமைகளையும் வெற்றி கொள்கின்றார். இத்தீமைக ளையும் அநீதிகளையும் வெற்றி கொள்வது தான் கிறிஸ்தவ அழைப்பு

நாம் எவ்வாறு வாழப்போகின்றோம்? ''நான் உங்களை அன்பு செய்தது போல நீங்களும் ஒருவர் ஒருவரை அன்பு செய்யுங்கள்'' என்கிறார் நம் ஆண்டவர். இறையன்பிலும் பிறரன்பிலும் நிலைத்திருந்து சிலுவையின் பாதையில் பயணிப்போம். நம்மை இழக்கும் பொழுதுதான் நாமாக மாறுகின்றோம். இறைமகன் கிறிஸ்துவின் இறைமக்களாக மாறுகின்றோம்.

அன்பின் சின்னமாம் சிலுவையை சுமந்து இயேசுவின் பின்னால் செல்வோம் அன்புச் சமூகம் படைப்போம்.

Sr.டிலோசியா

## OLD BOYS' ASSOCIATION
### ST. PATRICK'S COLLEGE JAFFNA
### ST. PATRICK'S DAY - 15 TH. MARCH 2008

**PROGRAMME:-**

TRIDUUM:- 12th. 13th. and 14th. AT 4.30 pm.
FESTIVAL EUCHARIST SERVICE AT 7.00 am.
ON STURDAY 15th. MARCH 2008
AT THE COLLEGE CHAPEL
O.B.A. GET - TOGETHER AND TEA
ON MONDAY 24th. MARCH 2008 at 4.30pm
AT MATHURAM SQUARE
MEMBERS OF THE O.B.A ARE CORDIALLY INVITED

NO. 59, ST. PATRICK'S ROAD,
JAFFNA.

S. MARIATHAS,
GEN. SECRETARY,
O.B.A. - S.P.C. JAFFNA.

## ZOA
REFUGEE CARE

### Can you meet the challenges of working in conflict-affected areas?

Since commencing operations in Sri Lanka in 1995, ZOA Refugee Care continues to be a field-based rehabilitation and emergency response organisation. The Mission of ZOA Refugee Care Sri Lanka is to support refugees, internally displaced people, returnees and other Sri Lankans affected by conflict or natural disaster in their transition from conflict to peace, from insecurity to stability, from relief to development and from dependence to self-reliance. Currently ZOA operates in the districts of Anuradhapura, Mannar, Trincomalee, Jaffna, Batticaloa, Kilinochchi, Mullaitheevu and Ampara.

ZOA is working in Shelter & Infrastructure, Water & Sanitation, Livelihood, Community enhancement and Education.

**Project Co-ordinator, Jaffna District, Sri Lanka**
*(Based in Jaffna reporting to Programme Manager)*

Main Responsibilities:
- Assist in all aspects of Project implementation to the affected populations in the Jaffna district in an integrated, holistic and professional manner

Qualifications:
- Working Experience in the humanitarian sector
- Computer litracy
- Fluency in English and Tamil, working knowledge of sinhala

**Administrative Co-ordinator, Jaffna District, Sri Lanka**
*(Based in Jaffna reporting to Programme Manager)*

Main Responsibilities:
- Responsible for the smooth running of all Administrative functions in the Jaffna programme.
- Liaise with government Institutions and other stake holders

Qualifications:
- Relevant professional qualifications & experiences
- Computer literacy
- Fluency in English and Tamil, working knowledge of sinhala

**Finance Officer, Jaffna District**
*(Based in Jaffna reporting to Administrative Co-ordinator)*

Main Responsibilities:
- responsible for all aspects of Financial Accounting & reporting of the Jaffna programme

Qualifications:
- Relevant professional qualifications & experiences
- Computer literacy
- Working knowledge of English, Tamil and preferably sinhala

**ZOA offers a competitive package comparable with International NGO Standards.**

Please send in your applications including an explanation of your suitability and motivation for the post, with complete bio-data and the names and contact numbers of two non related referees on or before 25th March 2008 to the following address (indicate the position on the top left hand corner of the envelope or the e-mail)

Administrative Assistant
ZOA Refugee Care
127/1, Temple Road
Jaffna.
Tel : 0212228561
E mail: jaffna@zoasrilanka.org

Only short listed candidates will be notified.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டுத்தாக்குதலுக்கு இலக்கானது புலனாய்வுத் துறை அலுவலகம் பாகிஸ்தானில் 25 பேர் பலியாகினர்; 200 பேர் படுகாயம்!!



தாக்குதலுக்கு இலக்கான புலனாய்வுத்துறை அலுவலகம் முற்றாக சேதமடைந்திருப்பதைக் காணலாம்.

லாகூர், மார்ச் 12

பாகிஸ்தானின் லாகூர் நகரில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இரு வேறு குண்டு வெடிப்புகளில் 25 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்; 200 பேரிற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

லாகூரில் அமைந்துள்ள சமஷ்டி பொலிஸ் புலனாய்வு விசாரணைப் பணியகத்திலேயே (பெடரல் இன்வெஸ்ரிகேஷன் ஏஜென்ஸி) முதலாவது குண்டுவெடிப்பு இடம்பெற்றது. இதன்போது 20 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். பொலிஸ் அலுவலகம் மோசமாக சேதமடைந்ததை தொலைக்காட்சிகள் காண்பித்துள்ளன. இந்தச் சம்பவத்தில் 200இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர்.

இடிபாடுகளுக்குள் தீ பற்றி எரிவதையும், அம்புலன்ஸ்கள் காயமடைந்தவர்களை அவசர அவசரமாக ஏற்றிச் செல்வதையும் தொலைக்காட்சிச் செய்திகளின் போது காணமுடிந்தது.

கட்டடத்தினதும் அருகில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களினதும் கண்ணாடிகள் வீதியில் சிதறிக் காணப்பட்டுள்ளன. பொலிஸ் அலுவலகத்தில் 300 இற்கும் மேற்பட்டவர்கள் பணிபுரிந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கார்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்திலேயே குண்டு பொருத்தப்பட்டிருந்தது என பொலிஸார் விசாரணைகளிலிருந்து கண்டு பிடித்துள்ளனர். வாகனங்கள் நிறுத்துமிடத்தில் குண்டு வைக்கப்பட்டிருந்தமையால் 50இற்கும் மேற்பட்ட கார்கள் எரிந்து நாசமாகின. கட்டட இடிபாடுகளுக்கிடையில் புலனாய்வுத் துறை பொலிஸார், அதிகாரிகள் உட்பட நூறிற்கும் மேற்பட்டோர் சிக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அவர்களை மீட்கும் பணி நடைபெற்றுவருகின்றது.

தீவிரவாதிகளுக்கு எதிராக பாகிஸ்தான் அரசு மேற்கொண்டுவரும் கடுமையான நடவடிக்கைகளை எதிர்த்து இந்தத் தாக்குதலைத் தீவிரவாதிகள் நடத்தியுள்ளனர் என இராணுவ வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

மற்றொரு குண்டுத் தாக்குதல் லாகூர் மொடல் டவுணில் நிகழ்ந்தது. வாகனமொன்றைச் செலுத்தி வந்த இரு தற்கொலைக் குண்டுதாரிகளே தாக்குதலை மேற்கொண்டனர் எனக் கூறப்படுகின்றது. இதன்போது இரு சிறுவர்கள் உட்பட ஐவர் பலியாகினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவதாக குடியிருப்புப் பகுதியிலும் குண்டு வெடித்தது. எனினும், குறித்த பகுதியில் அந்த நேரத்தில் யாரும் இல்லாமையால் உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸிரின் கொலைக்கு மூளையாக இருந்தவர் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ள தலிபான் தளபதி மெஹ்சூத்தைக் கைதுசெய்ய பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## போர்நிறுத்தம் பற்றி ஹமாஸுடன் பேசவில்லை - இஸ்ரேல் பிரதமர்

ஜெருசலேம், மார்ச் 12

காஸா பகுதியில் போர்நிறுத்தத்தைக் கொண்டு வருவது குறித்து இஸ்லாமிய தீவிரவாத இயக்கமான ஹமாஸ் அமைப்புடன் இஸ்ரேல் பேச்சு நடத்துவதாகக் கூறப்படுவதை, அந்நாட்டுப் பிரதமர் எஹூத் ஒல்மோர்ட் மறுத்துள்ளார்.

காஸாவில் இருந்து தாக்க வரும் ரொக்கட்டுகள் குறைந்த பிறகு, அந்தப் பிராந்தியத்தைத் தாக்குவதற்கான எந்தக் காரணமும் இஸ்ரேலுக்குக் கிடையாது என்றும் ஒல்மோர்ட் கூறியுள்ளார்.

போர்நிறுத்தம் குறித்து ஹமாஸுடன் பேசுவதற்கு மத்தியம் வகிக்குமாறு எகிப்தை இஸ்ரேல் கேட்டதாகக் கூறப்படுவதையும் இஸ்ரேல் மறுத்துள்ளது.

## மூன்று மாதங்களின் பின்பே பிரதமராக சர்தாரி முடிவு

இஸ்லாமாபாத், மார்ச் 12

பாகிஸ்தானில் மூன்று மாதத்துக்கு இடைக்காலப் பிரதமரை நியமிப்பது என்றும் அதன் பிறகு தானே பிரதமராவது எனவும் பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவர் ஆஸிப் அலி சர்தாரி முடிவுசெய்துள்ளார். இதுகுறித்த தகவலை அவரே வெளியிட்டுள்ளார்.

சிந்து மாகாணத்தைச சேர்ந்த பாகிஸ்தான் மக்கள் கட்சி எம்.பிக்களை ஹைதராபாத் நகரில் நேற்றுமுன்தினம் சர்தாரி சந்தித்துப் பேசினார். சிந்து மாகாணத்தைச் சேர்ந்தவர் பிரதமராக வேண்டும் என அந்த எம்.பிக்கள் விருப்பம் தெரிவித்தனர். எனவே அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்ற விரும்புகின்றார் என சர்தாரி சூசகமாகத் தெரிவித்தார்.

பாகிஸ்தான் மக்கள் கட்சியைச் சேர்ந்த மக்தூம் அமின் பாஹிமைப் பிரதமராக்க முதலில் சர்தாரி திட்டமிட்டிருந்தார். அதற்கான அறிவிப்பையும் தேர்தலுக்கு முன்பே அவர் வெளியிட்டிருந்தார். ஆனால், தற்போது தனது எண்ணத்தை மாற்றிக்கொண்டு மூன்று மாதத்துக்கு இடைக்காலப் பிரதமரை நியமிக்க சர்தாரி முடிவு செய்துள்ளார். இடைக்காலப் பிரதமர் பஞ்சாப் பகுதியைச் சேர்ந்தவராக இருக்கவேண்டும் எனவும் அவர் கருதியுள்ளார்.

மூன்று மாதத்துக்குள் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராவதற்கான முயற்சிகளை சர்தாரி மேற்கொள்வார். அதன் பின்னர் பிரதமர் பதவியைத் தானே ஏற்று ஆட்சியை வழிநடத்துவார் என்று பாகிஸ்தான் மக்கள் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்த விவகாரம் குறித்து கருத்துத் தெரிவிக்க மக்தூம் அமின் மறுத்துவிட்டார்.

## பாக்தாத் குண்டு வெடிப்பில் அமெரிக்கத் துருப்பினர் பலி

பாக்தாத், மார்ச் 12

ஈராக்கின் பாக்தாத் நகரில் நேற்றுமுன்தினம் நடந்த குண்டுவெடிப்பு ஒன்றில் அமெரிக்க இராணுவத்தினர் ஐவர் கொல்லப்பட்டிருக்கின்றனர் என ஈராக்கில் உள்ள அமெரிக்க இராணுவம் அறிவித்திருக்கிறது.

காவல் கடமையில் காலநடையாகப் போய்க்கொண்டிருந்த அமெரிக்கர்களை, வெடிபொருட்கள் நிறைந்த மேலங்கி அணிந்து வந்த தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் தாக்கினார் என்று நேரில் கண்டவர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

கடந்த சில மாதங்களில் பாக்தாத்தில் அமெரிக்கத் துருப்புகள் மீது நடத்தப்பட்ட தனியான தாக்குதல்களில் இது மிக மோசமானது என்று விவரிக்கப்பட்டுள்ளது..

## மரண அறிவித்தல்

### இளையவன் வல்லிபுரம்

(இளைப்பாறிய அதிபர், சமாதான நீதிவான், ஸ்தாபகர், முதலாவது அதிபர் - யா/இமையாணன் மகாவித்தியாலயம், முன்னாள் ஆசிரியர் - யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை, முன்னாள் அதிபர் - யா/ சுதுமலை அ.த.க. பாடசாலை, முன்னாள் அதிபர் - யா/நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை, முன்னாள் போஷகர் - வளர்மதி சனசமூக நிலையம், மானிப்பாய் வடக்கு, முன்னாள் செயலாளர் - விவசாய சம்மேளனம் மானிப்பாய் வடக்கு, போஷகர் - கிராமியக் குழு போறூட், தலைவர் - சிக்கனக் கடன் உதவிச் சங்கம், மானிப்பாய் வடக்கு, உதயன் செய்தியாளர்)



இமையாணனைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட இளையவன் வல்லிபுரம் அவர்கள் நேற்று (11.03.2008) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையவன் - சின்னப்பொடி தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான இ.கிருஸ்ணபிள்ளை, த.அசுபதி, இ.நவசிவாயம் ஆகியோரின் சகோதரரும் இராசம்மாவின்(இளைப்பாறிய அதிபர், கனிஷ்டபிரிவு, யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை) அன்புக் கணவரும், திருமதி லோ.ஜெயமதி (லண்டன் - முன்னாள் ஆசிரியை, சோதிவேம்படி வித்தியாசாலை, மானிப்பாய்), திருமதி ச.ஜெயதேவி (லண்டன் - முன்னாள் ஆசிரியை, யா/சண்டிலிப்பாய் மகாவித்தியாலயம்), திருமதி ம.ஜெயஜோதி (ஆசிரியை, யா/சென்ற் ஆன்ஸ் றோ.க.த. பாடசாலை, மானிப்பாய்), வ. முருகதாஸ் (ஆசிரியர், ம/மகிழவட்டுவான் மகா வித்தியாலயம், மட்டக்களப்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மா.லோகேஸ்வரன் (லண்டன்), க.சந்திரராஜன் (லண்டன்), ம.மதிஅழகன் (நூலகர், இணுவில் பொது நூலகம்), திருமதி மு.ரதிவதனா (ஆசிரியை, மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சாரங்கன், வர்ணன், ஷாருகன், பிரவீண், கேதாரணி, பவதாரணி, ஆகியோரின் பாசமிகு பேரனும், திருமதி சி.நாகமுத்து, க.இராசையா (இளைப்பாறிய உதவி பொலீஸ் அத்தியட்சகர்), திருமதி வேலையா சரஸ்வதி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (13.03.2008) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"ஜெயமகால்",*
*மானிப்பாய் வடக்கு,*
*மானிப்பாய்.*
*தொலைபேசி இல : 0214591609*

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.





பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த கர்ப்பிணித் தாய் ஒருவருக்கு 51 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் நேற்று இரத்ததானம் வழங்கினார்.

குறிப்பிட்ட சிப்பாய் இரத்த தானம் வழங்குவதையும் அதற்கான சான்றிதழை கர்ப்பிணித் தாயிடம் வழங்குவதையும் படங்களில் காணலாம். குறிப்பிட்ட கர்ப்பிணித் தாய்க்கு அவசரமாக 'ஓ நெகட்டிவ்' ரக இரத்தம் தேவைப்படுவதாக நேற்றைய 'உதயன்' இரண்டாம் பக்கத்தில் செய்தி வெளியாகி இருந்தது. அதனைப் பார்வையிட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி படைச் சிப்பாய்களை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு சென்று இரத்ததானம் செய்யுமாறு அறிவுறுத்தி இருந்தார். அதனைத் தொடர்ந்து படத்தில் உள்ள சிப்பாயின் இரத்தம் பொருந்தியதால் அவர் தனது இரத்தத்தைத் தானம் செய்தார்.

## கல்வியியற் கல்லூரிக்கு மேலும் 18 பேர் அனுமதி

யாழ்ப்பாணம்,மார்ச்12

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிக்கு மேலும் 18 மாணவர்கள் காத்திருப்போர் பட்டியிலில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இம்மாணவர்கள் நாளை வியாழக்கிழமை கல்லூரியில படிவங்களைப் பெற்று எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் கேட்டுள்ளார்

தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் விவரம் வருமாறு:-

**ஆரம்பக் கல்வி** - எஸ்.மகிழ்தினி(நீர்வேலி), எஸ்.கஜேந்திரன்(பொலிகண்டி கிழக்கு), கே.தினிஷா (கோண்டாவில் வடக்கு), கே.தனுஷா (திருநெல்வேலி), ஆரணி (கோப்பாய் மத்தி), எஸ்.சிறிவதனி (நீர்வேலி), எஸ்.சிறிலதா (நல்லூர்), என். ஜனனி(கோப்பாய் வடக்கு), வி.துஷ்யந்தி (அனலைதீவு), ஏ.சகீலன்(புன்னாலைக்கட்டுவன்), ரி.ஐங்கரதீபன் (குடத்தனை), எஸ்.சசிகலா(யாழ்ப்பாணம்), ரி.சிவப்பிரியா (அளவெட்டி), ஏ.சிந்துஜா(உடுப்பிட்டி), ஏ.அனுஜா (அல்வாய்), எஸ். சுகந்தன்(அல்வாய்)

**சித்திரம்** - ஜே.கரோலின்(யாழ்ப்பாணம்), எஸ்.சுதர்சன்(அல்வாய்)

(1-202)


**Internet சேவை**

Internet Browsing சேவையைப் பெற்றுக் கொள்ள
திருமுருகன் கொம்நெற்
259, K.K.S. Road, Jaffna.
46, Adiyapatham Road, Thirunelvely

**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777- 222422

இலங்கையில் முதற்தடவையாக கம்பனிக்கணக்குகளுடன்
Diploma in Computerized Accounting
*ACCPAC + QuickBooks premier + MYOB*
ஆகிய முன்னணி Accounting Software அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்.

Course Contents
Fundamentals of IT
Manual Accounting
Financial Accounting
Cost Accounting
Taxation (Including VAT)
Stock Control
Bank Reconciliation
Budgeting
Fore Casting
Business Planing

வகுப்புக்கள் ஆரம்பம் :
15/03/2008, 16/03/2008 : 10.00AM
18/03/2008, 20/03/2008 : 09.00AM

*Tally Accounting Package*
புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தஞ்சம் கோரிய 11 ஈழத்தமிழர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பியது உக்ரைன்!

கொழும்பு,மார்ச் 12

உக்ரைன் நாட்டில் தஞ்சம் கோரிய 11 இலங்கைத் தமிழர்கள் அந்த நாட்டு அரசினால் இந்த வாரம் பலவந்தமாக இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர் என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

இந்நடவடிக்கை சர்வதேச மனித உரிமைகள் மற்றும் அகதிகள் சட்டத்தை மீறும் செயல் என்றும் அது குற்றம் சாட்டியுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபை இது தொடர்பான தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

அரசு அரசியல் தஞ்சம் கோரிய 11 தமிழர்களை உக்ரைன் பலவந்தமாக இந்த வாரம் இலங்கைக்குத் திருப்பியனுப்பியது. அவர்கள் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்டமையால் சித்திரவதை உட்பட மோசமான மனித உரிமை மீறல்களுக்குள்ளாகலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட தமிழர்கள் தமது அரசியல் தஞ்சக் கோரிக்கையை முன்வைப்பதற்கு உக்ரைனில் நீதியான - நேர்மையான - வாய்ப்புகள் வழங்கப்படவில்லை.

இலங்கைத் தமிழர்கள் 11 பேரும் உக்ரைனிலுள்ள ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான தூதரகத்தில் தங்களைப் பதிவு செய்திருந்தனர். இதில் ஆறு பேர் தமக்கு அகதி அந்தஸ்து அளிக்குமாறு உக்ரைன் அதிகாரிகளிடம் விண்ணப்பித்திருந்தனர்.

எனினும், ஜனவரி மாத இறுதியில் அவர்கள் உக்ரைனின் பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர். (சி)




ஊடக அடக்குமுறைக்கு எதிராக நேற்று ரூபவாஹினி கூட்டுஸ்தாபனத்துக்கு முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது எடுக்கப்பட்ட படம்

## மட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுத் தெரிவாகும் அங்கத்தவர்களே சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபையின் மேயராக அல்லது தலைவராகப் பதவி வகிப்பது வழமை. அந்த வகையில் மட்டக்களப்பு மாநகர சபையின் மேயராக பத்மினியே நியமிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (அ-1)

## மோசடித் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையில் ஜனநாயக நெறிப்படி இத்தேர்தல் நடைபெறவில்லை. அரசும் அரசுடன் சேர்ந்தியங்கும் ஆயுதக்குழுக் களும் மக்களை அச்சுறுத்தி அவர்களிட மிருந்து வாக்காளர் அட்டைகளைப் பறித்து - பலவந்தமாக வாக்குப் பெட்டிகளை நிரப்பி - இத்தேர்தலை நடத்தி முடித்திருக்கின்றன.

கிட்டத்தட்ட 20 வீதமான வாக்குகளே அளிக்கப்பட்டுள்ளன. மீதி வாக்குகள் ஆயுதக்குழுக்களால் அவர்களின் சார்பில் நிரப்பப்பட்டுள்ளன.

### ஆயுதக்குழுவுடன் ஒப்பந்தம் செய்து போட்டியிட்ட ஒரே அரசு

உலகிலேயே முதன்முதலாக இலங்கை அரசு மாத்திரம்தான் ஆயுதத் குழுக்களுடன் ஒப்பந்தம் செய்து கூட்டமைத்துத் தேர்தல் நடத்தியிருக்கின்றது.

இதுபோலவேதான் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் புலிகளுடன் ஒப்பந்தம் செய்து ஏழு லட்சம் மக்களை வாக்களிக்கவிடாமல் தடுத்தது இந்த அரசு.

இந்தத் தேர்தல் பயங்கரவாதத்தை மீண்டும் வளர்த்துவிடும் ஒன்றாகவே அமைந்துள்ளது. ஓர் ஆயுதக்குழுவிடமிருந்து கிழக்கைக் கைப்பற்றிய அரசு, அதை வேறு ஓர் ஆயுதக் குழுவிடம் இப்போது ஒப்படைத்திருக்கின்றது.

இது பயங்கரவாதத்தை ஒழிக்கும் நடவடிக்கை அல்ல. ஒரு பயங்கரவாதத்தை ஒழித்து, வேறொரு பயங்கரவாதத்தை வளர்த்துவிடும் நடவடிக்கைதான் இது.

இத்தேர்தல் மூலம் இந்நாட்டு மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்ற இந்த அரசு முற்படுகின்றது. ஆனால் சர்வதேச சமூகம் உண்மை நிலையைத் தெரிந்து வைத்துள்ளது - என்றார். (சி)

## குடும்பஸ்தர் ஒருவர் இரவில் வீட்டிலிருந்து கடத்தப்பட்டார்

யாழ்ப்பாணம்,மார்ச்12

பண்டத்தரிப்பு, காலையடிப்பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு குடும்பஸ்தர் ஒருவர் அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டுள்ளார் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேஇடத்தைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான வர்ணகுலசிங்கம் குலதீபன்(வயது-29) என்பவரே கடத்தப்பட்டவராவார்.

இரவுவேளை வீட்டுக்கு வந்த ஆயுததாரிகள் தமது கணவனைக் கடத்திச் சென்றனர் என்று அவரது மனைவி தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (அ-1)

## பத்திரிகையாளர் காலமானார்



யாழ்ப்பாணம்,மார்ச்12

''உதயன்'' மானிப்பாய்ப் பகுதிச் செய் தியாளராக நீண்டகாலம் பணியாற்றிய இ.வல்லிபுரம் (வயது75) நேற்றுக் காலமானார். ஆசியராகப் பணியாற்றிய போதிலும் அவர் பத்திரிகைத் துறையில் மிகுந்த ஈடுபாட்டுடன் உழைத்தவர்.

சிறுதுகாலம் நோய்வாய்ப்பட்டிருந்த இவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று மரணமானார். அவரது இறுதிக்கிரியைகள் மானிப் பாயில் நாளை முற்பகல் 10 மணியளவில் இடம் பெறும்.

பல பாடசாலைகளில் அதிபராகப் பணியாற்றிய இவர் ஒரு சமூக சேவையாளருமாவார். (அ-1)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டத்தின் போது இலங்கை மற்றும் இந்திய அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

பெரியார் திராவிடர் கழகம், விடுதலைச் சிறுத்தைகள், புரட்சிகர இளைஞர் முன்னணி, தமிழ்த் தேசியப் பொதுவுடைமை மற்றும் ஆதித் தமிழர் பேரவையின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். அனுமதியின்றி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர் எனக் கூறி நூற்றுக்கும் மேற்பட்ட தமிழினப் பற்றாளர்கள் தமிழகப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (சி)

## ஊடக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடக அடக்குமுறைக்கு எதிராகவும், அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள் கோஷமெழுப்பினர்.

ஊடக அடக்குமுறை கண்டிக்கத்தக்க செயல் என ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் வலியுறுத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பிக்களான லக்ஷ்மன் கிரியெல்ல, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ஜயலத் ஜயவர்த்தன, ஜயந்த கருணாதிலக ஆகியோரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவு இணைப்பாளரும் எம்.பியுமான மங்கள சமரவீரவும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கைப் படைகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள அரசு ஒருதலைப்பட்சமாக வெளியேறித் தமிழர் தாயகத்தில் போரை விரிவாக்கியுள்ள இக்கால சூழலில், தமிழின அழிப்பிற்கு தலைமையேற்று வழி நடத்தும் சிங்களத்தின் இராணுவத் தளபதிக்கு இத்தகைய அரச கௌரவத்தை வழங்கியுள்ள இந்திய அரசின் செயலைப் புலிகள் இயக்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

இலங்கை அரசின் இராணுவ வழித்தீர்வுக்கு ஒருபுறமும் கட்டுக்கடங்காத மனித உரிமை மீறல்களுக்கு மறுபுறமாக உலகளாவிய ரீதியில் சிங்கள அரசு கண்டனங்களுக்கும் எச்சரிக்கைகளுக்கும் அதிகளவில் உள்ளாகி வருகின்றது.

ஆயினும், இக்கண்டனங்களையும் எச்சரிக்கைகளையும் புறம் தள்ளிவிட்டு அதிகளவிலான ஆள்கடத்தல்கள், படுகொலைகள், இனரீதியான கைதுகள் என்பனவற்றை சிங்களப்படைகள் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றன.

### உண்மையை மூடிமறைக்க புலிகள் மீது பழி சுமத்தப்படுகின்றது

இந்த உண்மையை மூடி மறைப்பதில் அக்கறை காட்டும் சிங்கள அரசு, தொடரும் போரிற்கான பழியைத் தமிழரின் சுதந்திர இயக்கமான புலிகள் இயக்கத்தின் மீது சுமத்தித் தனது இன அழிப்புப் போருக்கு உலகின் உதவியைக் கோரி நிற்கின்றது.

சிங்கள அரசின் இந்தக் கபட நோக்கத்தைப் பல ஐரோப்பிய நாடுகள் புரிந்து கொண்டு தமிழின அழிப்பிற்குத் துணை போகக்கூடிய உதவிகளை நிறுத்தியுள்ளன.

இந்த உண்மை இந்திய அரசிற்கும் நன்கு தெரியும். ஆயினும் தமிழர் பிரச்சினைக்கு அமைதி வழியில் அரசியல் தீர்வே காண வேண்டும் எனக் கூறிக்கொண்டு அதற்கு மாறாக இராணுவ ரீதியாக இலங்கை அரசிற்கு நம்பிக்கையூட்டும் இந்திய அரசின் செயற்பாடுகள் தமிழின அழிப்பிற்கே வழி கோலும்.

இந்திய அரசின் இந்த வரலாற்றுத் தவறானது, ஈழத் தமிழர்களைத் தொடர்ந்தும் இன்னல்களுக்குள்ளாக்கி ஒரு பாரிய இன அழிவு அபாயத்துக்குள் அவர்களைத் தள்ளிவிடும் என்பதை இந்திய அரசிற்கு சுட்டிக் காட்டப் புலிகள் இயக்கம் விரும்புகின்றது. இந்திய அரசு புரியும் இந்தத் தமிழின விரோதச் செயலை தமிழ் நாட்டு மக்கள் புரிந்து கொண்டு அதற்குத் தமது கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டும் என ஈழத் தமிழ் மக்கள் சார்பில் புலிகள் இயக்கம் அன்பாகக் கேட்டுக்கொள்கின்றது.

நாம் போர்நிறுத்த உடன்பாட்டிலிருந்து விலகவுமில்லை; போரைத் தொடங்கவும் இல்லை. எமது மக்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு தொடுத்துள்ள இன அழிப்புப் போருக்கு எதிராக ஒரு தற்காப்புப் போரையே நடத்தி வருகின்றோம்.

நாம் இன்னமும் நோர்வேயின் தலைமையிலான அமைதிவழி முயற்சிகளிலிருந்து விலகவில்லை. நோர்வே அரசின் தலைமையில் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளில் பங்கேற்கப் புலிகள் இயக்கம் தயாராகவே இருக்கின்றது.

இந்த நிலையில், அரசியல் - இராணுவ - பொருளாதார ரீதியாகத் தொய்ந்து போயுள்ள இலங்கை அரசிற்கு முண்டு கொடுக்கும் இந்திய அரசின் செயலானது ஈழத் தமிழ் மக்களைக் கோபத்துள்ளாக்கியுள்ளது.

''புலிகளுடனான போரில் சிங்களப் படைகள் இராணுவ ரீதியில் தொய்ந்து போவதை இந்தியா விரும்பவில்லை.'' என்ற இந்தியப் படையதிகாரிகளின் கூற்று சிங்களத்தின் போர் இயந்திரத்துக்கு முண்டு கொடுக்க முயலும் இந்திய அரசின் செயற்பாட்டையே வெளிப்படுத்துகின்றது.

இந்திய அரசின் இத்தகைய செயற்பாடுகளால் புத்தூக்கம் பெற்றுள்ள சிங்களப்படைகள் மேற்கொள்ளப்போகும் தமிழின அழிப்பிற்கு இந்திய அரசே பொறுப்பேற்க வேண்டும். - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## இலங்கை வன்முறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றது. அதில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கவலை தெரிவித்துள்ளார்.

நோர்வே தமிழ் அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இக்கண்டனக் கூட்டம் இடம்பெற்றது.

இலங்கையில் தற்போதைய நிலைவரம் குறித்து ஒன்றியப் பிரதிநிதிகள் விசேட தூதுவர் போவருக்கு எடுத்துக்கூறினர்.

கண்டனக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் படுகொலையைக் கண்டித்துக் கோஷம் எழுப்பியதுடன் இதுவரை படுகொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் படங்களைத் தாக்கிச் சென்றனர். (அ-1)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை சிவகுமாரன்



இல. 67/42, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் இல. 15, மல்லிகா ஒழுங்கை, வெள்ளவத்தையில் வசித்தவருமாகிய சின்னத்துரை சிவகுமாரன் நேற்று (11.03.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்துரை - ராசசெல்வமணி (பேபி) தம்பதியரின் அன்புப் புதல்வனும் சியாமளாவின் (வாசுகி) அன்புச் சகோதரனும் பரமநாதனின் (நாதன் - உரிமையாளர், நாதன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்) மைத்துனரும், லவநாதன், காலஞ்சென்ற குசநாதன், நிஷநாதன், கௌசிநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சாமினியின் சித்தப்பாவும் திரு. திருமதி கந்தசாமி கனகம்மா, திரு. திருமதி சிவலிங்கம் (காலஞ்சென்ற காந்தி ) இரத்தினமணி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2008) புதன்கிழமை வேம்படி முருகமூர்த்தி கோயில் வீதி, தாவடி, கொக்குவிலில் உள்ள வீ.சிவலிங்கம் அவர்களின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
சி.பரமநாதன் (மைத்துனர்)
நாதன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்

T.P.: 25055445
0602158007

(71964)


சுடர் ஒளி
மார்ச் 2 - 8 இதழ்
இன்று விற்பனையில்

### வீடு வாடகைக்குத் தேவை

உத்தரவாதமும் தகுந்த வாடகையும் வழங்கப்படும். நகரை அண்மித்த பகுதி விரும்பத்தக்கது.

தொடர்பு:- 155, 156, மின்சாரநிலைய வீதி
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
T.P: 0773086894

## கவர்ச்சிகரமான விலையில்

கேபிள் TV வயர் RG-6, RG-11 (Gel)
Dish அன்ரனா, றிசீவர், LNB
Sun TV, KTV Receivers
Sun TV, KTV Activation
மற்றும்
கேபிள் TV தொழில்நுட்ப ஆலோசனைகள்

PC SYSTEMS
Total IT Solution Providers
ஆலடிச் சந்தி, யாழ் வீதி, மானிப்பாய்.

MAHES EXAM
ORGANIC CHEMISTRY
காலம் - 13.03.2008(Thur)
நேரம் 9.00, 12.00, 3.00
(மூன்று நேரங்களில் பரீட்சை நடைபெறும்)
S.Vasu B.Sc.
NAVALAR


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.03.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org